
marxist.tncpim.org 999 477 6471

டிசம்பர் 2018, விலை ரூ.15.00

மார்க்சிஸ்ட்

தத்துவார்த்த மாத இதழ்

2018 ஜனவரி முதல் ஒலி இதழாகவும் வெளியாகிறது



கீழ்வெண்மணி 50

பிரிட்டிஷ் காலனியாதிக்க காலமாக இருந்தாலும், இந்திய விடுதலைக்கு பிறகான சூழலிலும், மாநிலத்தில் ஆட்சி மாறிய பின்னணியிலும், தொடரும் வர்க்கப் போராட்டத்தின் உக்கிரத்தை வெளிக்காட்டும் நிகழ்வுகளில் ஒன்றே கீழ்வெண்மணி தியாகம்.

இந்திய வரலாற்றில் சாதி !

தொழிலாளி விவசாயி ஒற்றுமையே புரட்சியின் அச்சாணி

மார்க்சிஸ்ட் தத்துவார்த்த மாத இதழ்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழாக்கம் - *மின்னூல்*

வெளியீடு : *FreeTamilEbooks.com*

காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய -

http://FreeTamilEbooks.com/ebooks/marxist_-

monthly_journal_december2018

மின்னூலாக்கம் - அ. அருந்தமிழ்யாழினி -

aruntamilyazhiniaravindan@gmail.com

This Book was produced using LaTeX +

Pandoc

பொருளடக்கம்

1. கீழ் வெண்மணி 50 ஆண்டுகள்:

தஞ்சையில் நிலவிய சுரண்டல் முறை

கோ. வீரய்யன்

தமிழகத்தில் விவசாயத்தில் இருந்த நிலப்பரப்பில் சுமார் 60 லட்சம் ஏக்கர்கள் ஜமீன்தார்களின் கையில் இருந்தது. 1,500 ஜமீன்தார்களிடம் சுமார் 59,87,107 ஏக்கர் நிலம் இருந்தது. கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி நம் நாட்டில் வேரூன்றுவதற்கு உதவி செய்த இந்த பேர்வழிகளுக்குத்தான் ஜமீன்தார்கள் என்று பெயர் சூட்டப்பட்டது. இவ்விதம் ஏற்படுத்தப்பட்ட ஜமீன்தாரி முறைக்குத்தான் சாசுவத நிலவரித் திட்டம் என்று பெயர். இந்தத்திட்டம் 1739இல் முதன் முதலில் வங்காளத்தில் அமுல்நடத்தப்பட்டு பிறகு சென்னைக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் ஜமீன்தார் முறை – சாசுவத நிலவரி முறை பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் 1802இல் அமல் நடத்தப்பட்டது. அப்போது வரி வசூலில் இருபங்கை அரசு கருவூலத்தில் கட்டவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில்உள்ள ஜமீன்தார்கள் தம் பகுதியில் உள்ள விவசாயிகளிடம் 74 லட்சம் ரூபாய்தான் வசூலிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. அப்படி வசூலிப்பதில் 49 லட்சம் ரூபாய் ஜமீன்தார்கள் அரசு கருவூலத்தில் கட்டிவிட வேண்டும். இப்படி ஜமீன்தார்கள் அரசுக்குக் கட்டும் வரிக்கு 'பேஷ்குஷ்' என்று பெயர். 74 லட்சத்தை வசூலித்து 49 லட்சத்தை அரசுக்குக் கட்டிவிட்டு, மீதி 25 லட்சத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய ஜமீன்தார்கள், 1938ஆம் ஆண்டு விவரப்படி, விவசாயிகளிடம் வசூலித்தது 254 லட்சம் ரூபாயாகும். 25 லட்சம் ரூபாய் எடுத்துக் கொள்ள

வேண்டிய ஜமீன்தார்கள் எடுத்துக் கொண்டதோ 205 லட்சம் ரூபாய். எட்டு மடங்கிற்கு மேல் அவர்கள் எடுத்துக் கொண்டு, விவசாயிகளைச் சுரண்டினார்கள்.

இவை போதாதென்று மேலும் கீழ்க்கண்டவாறெல்லாம் வரி வசூலித்தார்கள்.

• சமுதாய நிலத்தில் வளரும் மரத்திற்கு வரி

• நத்தம் ஜாரியில் வீடுகட்டிக் கொள்வதற்கு வரி

• புறம்போக்கு நிலத்தில் உள்ள புல்லுக்கு வரி

• கரம்பு நில உபயோக வரி

• ஆடுமாடு மேய வரி

• காட்டு மரத்தில் தழை வெட்டவும், விறகு வெட்டவும் வரி

இந்த வரி வசூலுக்கு அரசின் ஆதரவு அவர்களுக்கு

இருந்தது.

அரசுக்கு குறிப்பிட்ட சேவை செய்வதற்காக சிலருக்கு இனாமாகவோ பரிசாகவோ வழங்கப்பட்ட இனாம் ஒரு வகை. கோவில் மடங்களுக்கு வழங்கப்பட்ட இனாம் ஒரு வகை. இது தவிர தனிநபர்களுக்கு மான்யமாக வழங்கப்பட்ட இனாம்.

இப்படி தமிழகத்தில் 4500 இனாம்தார்கள் இருந்தனர். இதில் கடைசி பகுதி அவரவர்களே அனுபவித்து வந்தது. முதல் பகுதி இனாம் அநேகமாக இவர்களும் ஒரு குட்டி ஜமீன்தார்கள் போல்தான். விவசாய வேலைகளில் ஈடுபடாத இனாம்தார்கள் விவசாயிகளிடமிருந்து வசூலித்து விவசாயிகளை ஒட்டச் சுரண்டிக் கொண்டிருந்தார்கள்.

மடாதிபதிகளும், கோவில்களும் தங்கள் இனாம் நிலத்தை, பல கிராமங்களை, ஓராண்டு, ஐந்தாண்டு,

பத்தாண்டு என்று குத்தகைக்கு விட்டுவிடுவது வழக்கம். அந்த மொத்த குத்தகைதாரரர் பல ஆயிரம் ஏக்கர்களை மொத்த குத்தகைக்கு எடுத்து, ஒரு பகுதியைச் சொந்த பண்ணையாக வைத்துக் கொள்வார். பெரும் பகுதியை விவசாயிகளிடம் கொடுத்து சாகுபடி செய்யச் சொல்வார். இவர் பண்ணை சாகுபடிக்கு பலரை பண்ணை ஆட்களாக அமர்த்திக் கொண்டிருப்பார். அவர்களுக்கு ஐம்பது, நூறு என்று கடன் கொடுத்து வேலை வாங்குவார். அவர்களுக்குப் பெயர் பண்ணையாள் (சுகந்தை) என்பதாகும். அப்படி பணம் வாங்கும் குடும்பம் முழுவதும் அந்த மொத்த குத்தகைதாரரிடம் பண்ணை அடிமையாக உழைக்க வேண்டும்.

தினசரி ஆணுக்கு கூலி மூன்று சின்னபடி நெல், ஒரு அணா காசு. பெண்கள் வயல் வேலை செய்யும்போது மட்டும், தினசரி இரண்டு சின்னபடி நெல் மட்டுமே கொடுப்பர். ஆண்டு முழுவதும்

மாட்டுத் தொழுவத்தில் வேலை செய்தால் மாதம் மூன்று மரக்கால் அல்லது நான்கு மரக்கால் நெல் கிடைக்கும். பண்ணையாளின் பிள்ளைகள் மாடுமேய்க்க வேண்டும். மொத்தக் குத்தகைதாரரிடம் நிலம் பெற்று சாகுபடி செய்பவர்களும் மொத்த குத்தகைதாரர் பண்ணை சாகுபடி நிலத்தை நடவு வேலை முடித்து விட்டுத்தான் அவர் தனது சொந்த சாகுபடியைச் செய்ய வேண்டும். அப்படி பண்ணை சாகுபடி வேலை செய்வதில் பெரும்பகுதி இனாம் வேலைதான்.

சாகுபடிதாரர் தான் சாகுபடி செய்யும் நிலத்தை அறுவடை செய்யும்போது, இனாம்தார் – மொத்த குத்தகை சாகுபடிதாரர்களின் ஏஜண்ட், குண்டர்கள் சகிதம் களத்திற்கு வந்துவிடுவார். கண்டுமுதல் ஆகும் தானியத்தில் நூற்றுக்கு18 முதல் 20 சதவீதம் வரை அவர்களுக்கு வாரம் கொடுக்கப்படும். அதைத்தான்

சாகுபடிதாரர் பெற்றுப் போக வேண்டும். 80 சதவீதம் வரை மொத்தக் குத்தகைதாரர் எடுத்துச்சென்று விடுவார்.

ரயத்துவாரி நிலப்பிரப்புக்கள், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர்கள். பல கிராமங்கள்இவர்களுக்குச் சொந்தம். இவர்களும் கிராமத்திற்கு ஒரு பண்ணை, அதற்கு ஒரு பங்களா – நிர்வகிக்க தலையாரி, ஏஜண்ட், கணக்கர் என்று ஆட்கள், 8, 10 பண்ணையாட்கள் வைத்து பண்ணை வைத்துக் கொள்வார்கள். ஒரு பகுதியை சாகுபடிக்கும் கொடுப்பார்கள். சில கிராமங்களில்இரு பண்ணைகள் இருப்பதும் உண்டு. இவர்களிடம் பண்ணையாட்களாக இருப்பவர்கள் பரம்பரை பரம்பரையாக அடிமைகளாகவே இருப்பவர்கள்.

ஒரு பண்ணையில் இருப்பவர்கள், அடுத்த பண்ணைக்கு வேலைக்குப் போய்விடக் கூடாது. இந்தப்

பண்ணையார் குடும்பமும் மொத்த குத்தகைதாரர் பண்ணையாட்களை நடத்துவதைவிட கடுமையாக நடத்துவார்கள்.

சாகுபடிதாரர்கள், பண்ணை நடவு, அறுவடையை முடித்து விட்டுத்தான் தங்கள் சாகுபடி நிலத்தில் நடவோஅறுவடையோ செய்ய வேண்டும். அப்போதுதான் பண்ணை ஏஜண்ட், தலையாரிகள், சாகுபடிதாரரின் அறுவடையைக் கண்காணிக்க வர முடியும். முன்னாலே இவர்கள் அறுவடை செய்தால் அடுத்த ஆண்டு அந்த நிலம் சாகுபடிக்கு இவரிடம் இருக்காது. இவரும் அந்த ஊரில் இருக்க முடியாது.

இப்படி பண்ணையார் ஆட்கள் காவல் காக்க சாகுபடிதாரர் அறுவடை செய்து கண்டுமுதல் ஆகும் நெல் முழுவதும் பண்ணையாரின் பெரும் பட்டறைக்கு போய்விடும். கண்டுமுதல் எவ்வளவு கண்டது என்ற கணக்குகூட இவரிடம்தான் இருக்கும்.

பிறகுபண்ணையார் பட்டறையில் இருக்கும் அனைத்து சாகுபடிதார்களின் நெல்லும்எடுக்கப்பட்டு பண்ணைக்கு பாதுகாப்பான இடத்தில் கொண்டுபோய் சேர் கட்டியபிறகு, சாகுபடிதாரர்களின் கணக்கு பார்க்கப்பட்டு 18 வாரம் அல்லது 20 வாரம் கணக்கிட்டு, விவசாய வேலை ஆரம்பம் முதல் விதை, தசுக்கூலி, இடையில் குடும்பச்செலவுக்கான சாகுபடிதாரர் வாங்கியிருக்கும் கணக்குப் படிக்கப்பட்டு, மீதி இவ்வளவுதான் வாரத்தில் பாக்கி கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அதுவும் கொடுக்க மாட்டார்கள்.

வைக்கோல் போரில் நெல் இருக்கிறது, இன்னும் கூடுதலாகவே கூட இருக்கும். எனவே வைக்கோல் போர் அடித்து, வாரத்தில் பாக்கி எடுத்துக்கொண்டு, அதில் மீதமுள்ள நெல்லை பண்ணையில் கொடுத்துவிட வேண்டும் என்றும், மேலும் வைக்கோல் போரில் பாதியை கொண்டுவந்து பண்ணைக் கொல்லையில்

போர்போட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்றும், தனது ஏஜண்ட் மூலம் பண்ணையார் சாகுபடிதாரருக்கு அறிவிப்பார். இதுதான் ரயத்துவாரி நிலப்பிரபுக்களிடம் இருந்த கிராம நிலை.

சொந்தநிலம் இல்லாத கூலி உழைப்பு மூலம்தான் உயிர்வாழ முடியும் என்றிருந்த ஏழைகள் ஆண்டாண்டுகாலமாக குடும்பம் முழுவதுமாக உழைத்தார்கள், உழைத்தும் வருகிறார்கள். இவர்கள் பண்ணையாட்களாக, ஆண்களும் பெண்களும் அவர்கள் பிள்ளைகளும் – இவர்களின் முன்னோர்கள் வாங்கிய கடனுக்கு புரோநோட் எழுதிக் கொடுத்துவிட்டு 'சுகந்தை' என்ற பெயருடன் வேலை செய்து வந்தார்கள். ஒரு மிராசுதாரிடம் வேலை செய்யும் பண்ணையாள் அந்த மிராசுதாரின் இடத்தில்தான் குடிசை போட்டு குடியிருக்க வேண்டும். வேறொரு இடத்திற்குப் போகக் கூடாது.அப்படிப் போய்விட்டால் அந்த குடியிருக்கும்

குடிசை இடித்துத் தரைமட்டமாக்கப்படும்.

உடம்பு சரியில்லை என்று தவறி ஒருநாள் அவன் வேலைக்கு வராமல் இருந்து விட்டால், அவன் உடனே அழைத்து வரப்பட்டு சாட்டையால் அடிக்கப்படுவான். அதோடு அவன் செய்தஇந்த 'மா பாதக' செயலுக்காக, உடல்நிலை சரியில்லை என்று வேலைக்கு வராமல்இருந்ததற்காக, மாட்டுச் சாணத்தை தண்ணீரில் கரைத்து அவனுக்கு கொடுக்கப்படும். அதை அவன் குடிக்க வேண்டும். இத்தகைய கொடுந்தண்டனைகளைத் தாங்கிக் கொண்டு, அவன் வேலை செய்ய வேண்டும்.

கோழிகூப்பிடும் நேரத்திற்கு ஆண்டை வீட்டுக்கு வந்து, இரவு கொசுக்கடி ஆரம்பித்தபிறகுதான் அவன் வீடு திரும்ப வேண்டும். இந்த வேலைக்கு அவனுக்கு தினக்கூலி 3 சின்னபடி நெல், ஒருஅணா காசு. மதியம் சோறு போட்டால் அதற்காகக் கூலியில் ஒரு சின்னபடி

நெல் பிடிக்கப்படும். அவன் சோறு சாப்பிட்டால், அதை அவன் இலைபோட்டு சாப்பிடக்கூடாது. பித்தளைப் பாத்திரத்தில் சாப்பிடக்கூடாது. பழையகால சிறைக் கைதிகளுக்கு தருவதுபோல், மண்ணாலான மல்லைசட்டியில்தான் சாப்பிடவேண்டும். அதுதான் பண்ணையாள் சாப்பிடும் பாத்திரம். அது இல்லாவிட்டால், இரும்பு மரக்காலில்அவனுக்குச் சோறு போடப்படும். அவன் மனைவியும், பிள்ளைகளும் மிராசுதார் வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். மாடு மேய்க்கவேண்டும்.

பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாது, படிக்க வைக்கக் கூடாது. பண்ணையாள் வீட்டில் எரிக்கும் அடுப்புச்சாம்பலும் உரமாக சேர்த்து வைக்கப்பட்டு மிராசுதார் நிலத்திற்கு எந்த விலையும் இல்லாமல் கொடுக்க வேண்டும். பண்ணையாளின்வீட்டுக்கூரையை மூடிவைக்க

கொல்லையில்பரங்கி, பூசணி செடிபோட்டு கூரை மேல் விட்டு ஆறு மாதம் அந்த நிழலில் அவன் வாழ்வான். அதுதான் அவனுக்குச் சொந்தம். அதில் காய்க்கும் காய்கள் முழுவதையும் மிராசுதார் வீட்டுக்குக் கொடுத்துவிட வேண்டும். வயலில் மேயும் நண்டும் நத்தையும்தான் அவன் காய்கறிகள். தனது பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ திருமணம் செய்ய வேண்டும் என்றால், மிராசுதார் அனுமதி இல்லாமல் செய்ய முடியாது. இந்த ஆண்டு திருமணம் வேண்டாம் என்று மிராசுதார் கூறிவிட்டால்அதைத் தாண்டி திருமணம் செய்யமுடியாது, செய்யக் கூடாது.

பண்ணை அடிமைகளாக இருந்தவர்களில் பெரும் பகுதியினர் ஜாதியில் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்ததால், ஜாதியக் கொடுமை கொடூரமாக இருந்தது. மேல்ஜாதிக்காரரர்கள் தெருவில் மிராசுதார்கள் வீட்டிற்கேயானாலும் வண்டி ஓட்டிச்சென்றால்,

தெருவில் வரும்போது, கீழே இறங்கி வண்டிக்கு முன்னால் நடந்தேதான் வண்டியை இழுத்துச் செல்ல வேண்டும். அக்ரகாரத்தின் பக்கம் அடிகூட வைக்கமுடியாது. இடுப்பில் வேட்டி கட்டக் கூடாது. கோவணத்துடன்தான் இருக்கவேண்டும். ஆண்டிற்கு ஒருமுறை தீபாவளியன்று ஆண்டை எடுத்துக் கொடுக்கும் ஒரு வேட்டியுடன்தான் அடுத்த ஆண்டு வரை இருக்க வேண்டும். அதையும் தலையில்தான் கட்டிக் கொள்ள வேண்டும். மேலே சட்டை போட்டுக் கொள்ளக்கூடாது. அதேபோல் பண்ணையான் மனைவியும் இரவிக்கை போடக் கூடாது. சேலையை முழங்கால்அளவிற்குத்தான் கட்ட வேண்டும். முழங்காலுக்கும் கீழே வரும்படி சேலை கட்டக்கூடாது. அந்தப் பெண் நல்ல உடற்கட்டுடன் இருந்துவிட்டால் போதும்.

மிராசுதார்களின் இச்சைக்கும் இணங்கியாக

வேண்டும். தனது கணவனை கட்டி வைத்து அடித்தாலும் மனைவியோ, பிள்ளைகளோ எதிரில் நின்றாலும், ‘அடிக்கிறார்களே’ என்று வாய்விட்டு அழக்கூடாது. வாயிருந்தும் ஊமைகளாய் இருக்க வேண்டும். அதேபோல் பண்ணையாள் மனைவியையோ, பிள்ளைகளையோ அடித்தாலும் அவன் கண் இருந்தும் குருடனாகவே இருக்கவேண்டும். ஆண்டையோ அவர் உத்தரவின் பேரில் அவர் ஏஜண்டோ அடிக்கும்போதுகூட வலி தாங்காது ஐயோ என்ற கத்தக் கூடாது. ஐயா என்றுதான் கத்த வேண்டும். இவைகள் கதைகளல்ல. அன்று சமூக நியதியாக இருந்தவை இவைதான்.

இந்தக் கொடுமைகள் தாளாது தங்களின் குடும்பங்களையும் விட்டுவிட்டு பர்மாவிற்கும், மலேயாவிற்கும், இலங்கைக்கும் ஓடிய பண்ணை அடிமைகளும் குத்தகை அடிமைகளும் ஏராளம்.

இலங்கையின் தேயிலைத் தோட்டத்தில் கொசுக்களின் கொடுமையும், மலேயாவின் ரப்பர் தோட்டத்தில் அட்டைகளின் கடியும், தமிழகத்து நிலப்பிரபுக்களின் கொடுமையைவிட எவ்வளவோ மேல் என்று ஓடியவர்கள் ஏராளம்உண்டு.

இப்படித்தான் ஜமீன்தார்கள் – இனாம்தார்கள்- மொத்த குத்தகைதாரர்கள் – நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன், பாதுகாப்புடன் கோலோச்சிய உறவுமுறைகளை பிரிட்டிஷ் அரசு சென்னை மாகாணத்தில், தமிழ்நாட்டில் ஏற்படுத்தியிருந்தது. இது 200 ஆண்டுகால வெள்ளையர்களின் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட சமூக அஸ்திவாரமாகும்.

உலகின் மிகப் பெரும் வல்லரசுகள், தங்களிடையே உள்ள வியாபாரப் போட்டியால் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தைப் போக்கிக்கொள்ளவும்,

சுருங்கிவரும் தங்களின் சந்தைகளை விஸ்தரித்துக் கொள்ளவுமான போட்டியின் காரணமாக 1939-இல் இரண்டாவது உலக யுத்தம் துவங்கியது. யுத்தத்தை துவக்கிய ஜெர்மன்தேசத்து சர்வாதிகாரி ஹிட்லர், உலகில் உழைப்பாளி மக்களுக்கு வழிகாட்டியாக இருந்த சோசலிச நாடான சோவியத் யூனியனை அடிபணியவைக்கவும், உலகை தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரவும் உலகம் முழுவதிலும் ஒரு பாசிச ஆட்சியைக் கொண்டு வரவும், இத்தாலியையும் ஜப்பானையும் தனக்குத் துணையாகக் கொண்டு உலகப் போரை உச்சகட்டத்தில் நடத்திக் கொண்டிருந்தான். உலகம் முழுவதும் இருக்கும் உழைப்பாளி மக்கள் பாசிசத்தையும், ஹிட்லரையும் தோற்கடிக்க அணிதிரண்டு நின்றார்கள்.

அந்த உலக யுத்தத்தில், நமது நாட்டை ஆண்டபிரிட்டிஷார் ஒரு பங்காளியாக இருந்தார்கள்.

நாட்டின் சகல உற்பத்தி ஏற்பாடுகளும் யுத்த தேவைக்கு திருப்பிவிடப்பட்டன. பெட்ரோலும், டீசலும், துணியும், உணவும் யுத்த முகாமுக்கு என்று திருப்பி விடப்பட்ட நேரம். கட்டத்துணியும், சாப்பிட உணவும், விளக்கு எரிக்க எண்ணெயும் இன்றி கிராமத்து மக்கள் சொல்லொணா துன்பத்திற்கு ஆளாகி நின்றார்கள். ராணுவத்திற்கு ஆள் என்றும், யுத்தத்திற்கு வரி என்றும், ஆளும்அரசு கிராம மக்களை கிட்டி போட்டு நெரித்துக் கொண்டிருந்தது. ஜமீன்தார்களும், இனாம்தார்களும், மிராசுதார்களும் கிராமத்து மக்களை யுத்தநேரத்தில் நெருக்கி அவர்களின் தானியம் முழுவதையும் அள்ளிச் சென்று யுத்தகால விலை உயர்வால் பெரும் கொள்ளை அடித்துக்கொண்டிருந்தார்கள்.

இந்திய சுதந்திர இயக்கத்திலும், முற்போக்கு இயக்கங்களிலும் முன்னணியில் நின்ற வங்க மாநிலத்தில் விவசாயிகள் இயக்கம், விவசாயிகள்

உற்பத்தி செய்யும் தானியத்தில் மூன்றில் இரண்டு பங்கு வேண்டும் (தேபாகா) என்று போராடி, வெற்றி கண்ட வங்கத்து கிராம மக்களை உணவுப் பஞ்சம் கவ்வியதால் உண்ண உணவு இன்றி பல லட்சம் மக்கள் செத்து மடிந்தார்கள்.

தமிழ்நாட்டிலும் உணவுப் பஞ்சம் தலை விரித்தாடியது. சிவகாசிக்கு அருகில் உரத்திற்காக வயலில் போட்ட கடலைப் பிண்ணாக்கை பசி தாங்காது எடுத்து தின்ற மக்கள் பலர் காலரா நோய்க்கு பலியாகி மாண்டனர். இந்த சமுதாய அரசியல் சூழ்நிலையில்தான், இப்படி பெரும் வேலைகள் நிறைந்திருந்த சூழ்நிலையில்தான், கிராமத்து மக்களை அமைப்பு ரீதியாக ஒன்று திரட்ட, தமிழக விவசாயிகள் இயக்கம் முன்னுக்கு வர முற்பட்டது.

(தோழர் கோ.வீரய்யன் எழுதிய ''விவசாயிகள் இயக்கத்தின் வீர வரலாறு'' நூலில் உள்ள சிறு பகுதி)

2. கீழத்தஞ்சை: செங்கொடி இயக்கத்தின் முகவரி

உ. வாசுகி

1968 டிசம்பர் 25, உரிமை கேட்ட விவசாயி, விவசாய தொழிலாளிகளின் மீது, ஏற்றிய செங்கொடியை இறக்க மறுத்தவர்கள் மீது கீழவெண்மணியில் ஒரு பக்கம் கிசான் போலீசின் குண்டுகள் பாய்ந்தன; மறுபக்கம் ஆண்டைகளின் குண்டர்களால் 44 உயிர்கள் கொளுத்தப்பட்டன. ரவுடிகளும், காவல்துறையும், அரசும், சட்டமும் மிராசுகளின் கண் சாடையில் கோரத்தாண்டவம் ஆடி முடித்தன.

வாழ்வியலின் அனைத்து அம்சங்களும் கட்டுப்பாட்டுக்குள்:

கீழத்தஞ்சையில் அனைத்து அதிகாரங்களையும், பல்லாயிரக்கணக்கான வேலி நிலங்களையும், செல்வங்களையும், வளங்களையும் வைத்திருந்த பண்ணைகளின் ஆதிக்கத்தின் கீழ் அடிமைகளாய் இருந்த உழைப்பாளிகளின் கதி படுமோசமாக இருந்தது. நாள் முழுவதும் வேலை செய்தால் கூலி வெறும் அரை மரக்கால் நெல். மொத்தத்தில் குடும்பத்தின் மாத வருமானம் ரூ.160-170 மட்டுமே.

கூலியை மட்டும் பண்ணைகள் நிர்ணயிக்கவில்லை; அவர்களின் ஒட்டு மொத்த வாழ்வியலையே நிர்ணயித்தனர். என்ன உண்ண வேண்டும், என்ன உடுக்க வேண்டும், எப்படி உடுக்க வேண்டும், எங்கு வசிக்க வேண்டும், பண்ணையின் எதிரில் எங்கு நிற்க வேண்டும், எப்படி நிற்க வேண்டும் என வாழ்வின் அனைத்து அம்சங்களும் கட்டுப்படுத்தப்பட்டன. மண் கலயங்களுக்கு மட்டுமே

அனுமதி. பெண்களைப் பாலியல் வல்லுறவு செய்வது பண்ணைகளின் உரிமை. கொடுமைகளிலிருந்து தப்பிக்க முடியாது. தப்பிக்க நினைத்தாலே சவுக்கடியும், சாணிப்பாலும் தான். ஆபாச வசவுகளும், அடிமை வாழ்வும் நிதம் நிதம் விதிக்கப்பட்டவையாக இருந்தன. மொத்தத்தில் குத்தகை விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் பண்ணைகளின் கையில் உழைப்பு சுரண்டலுக்கு மட்டும் ஆளாகவில்லை.

சமூக ஒடுக்குமுறையும், பண்பாட்டு ஒடுக்குமுறையும் சேர்ந்து நடந்தன. பொருளாதார சுரண்டலும் சமூக ஒடுக்குமுறை அல்லது கட்டுப்பாடும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. பண்ணையார்களுக்கு இருந்த நிலத்தின் மீதான உரிமை, அதன் உற்பத்தி மீதான கட்டுப்பாடு மற்றும் அதிகாரம் கூலிகளின் வாழ்க்கை மீது ஆதிக்கம் செலுத்தும் அதிகாரத்தையும் அளித்தது. இதற்கெதிரான போராட்ட

அலையின் உச்சகட்டம் தான் கீழவெண்மணியின் படுகொலைகள்.

இது தான் அரசு:

வெண்மணி கொடுமை நடந்தது முடியரசில் இல்லை; குடியரசில் தான். சர்வாதிகாரத்தில் இல்லை; ஜனநாயகத்தில் தான். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கமும், காவல்துறையும், சட்டமும், நீதித்துறையும் இருந்தும் இக்கொடுமைகள் நடந்து கொண்டிருந்தன. ஏனெனில் இவை அனைத்தையும் உள்ளடக்கிய அரசு, அனைவருக்கும் மேலானது; நடுநிலையானது என்பது கற்பிதமே. மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் அனைவருமே 'அரசு' குறித்த கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். ''மன்னராட்சியில் மட்டுமல்ல; ஜனநாயக அமைப்பிலும் கூட அரசு, ஒரு வர்க்கத்தை மற்றொரு வர்க்கம் ஒடுக்குவதற்கான கருவிதான்'' என்கிறார் எங்கல்ஸ். "முதலாளித்துவ அரசு,

தொழிலாளி வர்க்கத்தை நசுக்குவதற்கான கருவி'' என்கிறார் மார்க்ஸ். அரசும் புரட்சியும் என்ற நூலில், லெனின், ''சமரசம் காண முடியாத வர்க்க முரண்பாடுகளின் பிரதிபலிப்பும், விளைபொருளும் தான் அரசு'' என்கிறார்.

வெண்மணி கொடுமைகளின் போதும், அதற்கு முன்னும் பின்னும் அரசு எந்திரம் இதைத் தான் ஒளிவு மறைவு இன்றி பட்டவர்த்தனமாக செய்தது. ஊடகங்களும் விதிவிலக்காக இல்லை. 'சுதந்திர' ஊடகங்களும் வர்க்க பிடிப்புக்குள் தான். வெண்மணியில் அதிகார வர்க்கத்தின் கோர நர்த்தனத்தை, பிரதான பத்திரிகைகள், 'விவசாயிகளுக்கிடையே நடந்த கலவரமாக'வே செய்தியாக்கின. இவர்கள் கூலி உயர்வு கேட்டதால், மிராசுதார்கள், தங்களின் சட்ட உரிமையின் படி, வெளியேயிருந்து ஆட்களைக் கொண்டு வந்ததாகவும்,

அவர்களுக்கும் உள்ளூர் கூலியாட்களுக்கும் இடையே நடந்த கலவரத்தின் விளைவு தான் இது என்பதாகவும் எழுதப்பட்டது.

அரசியல் ரீதியாகப் பண்ணையார்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு சாதகமாகவும், பிறகு கதர் சட்டையணிந்த காங்கிரஸ்காரர்களாகவும், நீதிக்கட்சியின் ஆதரவாளர்களாகவும், திமுக ஆளும் கட்சியானதற்குப் பிறகு அதனுடன் சமரசம் செய்து கொண்டவர்களாகவும் இருந்தனர். நிலக்குவியலும், சாதிய கட்டுமானமும் ஆட்சிகள் மாறினாலும் இறுக்கமாகவே தொடர்ந்தன.

பண்பாட்டுரீதியானஒடுக்குமுறை:

1947-ல் தோழர் சீனிவாசராவ் எழுதிய 'தஞ்சையில் நடப்பதென்ன?' என்கிற நூல் ஒடுக்குமுறையின் முழு பரிமாணங்களையும் விளக்குகிறது. பண்ணையாட்கள்

பெரும்பாலும் தலித் வகுப்பை சேர்ந்தவர்கள் என்பது சாதிய பரிமாணத்தையும் முன்னிறுத்துகிறது. அவர்கள் கொத்தடிமைகள் போலவே நடத்தப்பட்டார்கள். அடிமையின் அனைத்து நடவடிக்கைகளும் அடிமை உரிமையாளர் போடும் கோடுகளுக்குள் தானே? இந்த இடத்தில் மனுவின் அநீதி கோட்பாடுகளை சற்று நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். சூத்திரர்களுக்குக் கல்வி கூடாது; சொத்து கூடாது; ஆயுதம் வைத்துக் கொள்ளக் கூடாது; அவர்ணர்கள், அதாவது வருணங்களுக்கு வெளியே இருப்பவர்கள், உடைந்த மண் கலங்களையும், பிணங்களின் வஸ்திரங்களையுமே பயன்படுத்த வேண்டும், மற்றவர்கள் உதறி விடும் சோற்று பருக்கைகளே இவர்கள் உணவாகும்.... போன்ற விதிகளின் சாராம்சத்தைக் கீழத்தஞ்சையில் உணர முடிந்தது.

அடிமை சமூகத்தில் அடிமைகள் மீதான

உளவியல் மற்றும் பண்பாட்டு ரீதியான கட்டுப்பாடு சட்டபூர்வமானது. அதற்கான விதிமுறைகள் நிலவின. உதாரணமாக 1852ல் லூசியானா அடிமை கோட்பாடு (slave code) கீழ்க்கண்ட விதிகளை வகுத்தது:

1. அடிமையின் உரிமையாளர் மற்றும் அவர் குடும்பத்துக்கு முழுமையாக அடிபணிய வேண்டும். அவர்கள் சொல்லும் வேலைகளை உடனடியாக செய்து முடிக்க வேண்டும்.

2. அடிமைக்கு எதுவுமே சொந்தமாக இருக்க முடியாது.

3. உரிமையாளரின் அனுமதியின்றி அவரது தோட்டத்திலிருந்து/பண்ணையிலிருந்து வெளியேற முடியாது.

4. அடிமைக்கு யாராவது கல்வி கொடுத்தால், கற்றுக் கொடுப்பவருக்கு தண்டனை உண்டு.

5. ஒரு சின்ன மீறல் இருந்தாலும் கடும் சவுக்கடி கிடைக்கும். கீழத்தஞ்சை கொடுமைகளை இதனுடன் பொருத்திப் பார்த்தால் மிகச் சரியாகப் பொருந்துகிறது. அமெரிக்காவின் லூசியானாவில் 160 ஆண்டுகளுக்கு முன் அமலில் இருந்த மனித உரிமை மீறல்களைப் போன்ற நிலை தமிழகத்தில் 50 ஆண்டுகளுக்கு முன் வரை கீழத்தஞ்சையில் நிலவியது.

நவீன மனு நீதி:

பண்ணையாட்களின் குழந்தைகளுக்குக் கல்வி அறவே அனுமதிக்கப்படாத ஒன்று. ஏனெனில் அவர்கள் பண்ணையார்களுக்கு சேவை செய்ய பிறந்தவர்கள். 6 வயதான சிறுவர்கள் மாடு மேய்க்க வேண்டும்; 10 வயதானால் மாட்டுத் தொழுவத்தில் சாணி அள்ள வேண்டும்; 15 வயதில் மாட்டு வண்டி ஓட்டும் வேலை; 18 வயதில் அப்பா அம்மாவைப்

போல் கொத்தடிமை. சிறுமிகள் ஆடு மாடுகளுக்கு இழை தழை பறிக்க வேண்டும். சமைக்க சாப்பிட மண் சட்டி தான். உடையை எடுத்துக் கொண்டால் ஆண்கள் ஒரு துண்டு கட்டிக் கொள்ளலாம் என்றாலும் பொதுவாகக் கோவணம் உடுத்தும் நிலை தான்.

பெண்களின் புடவை முட்டியோடு தான் நிற்க வேண்டும். யாரும் செருப்பு போடக் கூடாது. பொதுக்கிணறுகளில் தண்ணீர் எடுக்க முடியாது. இவர்கள் வசிக்கும் பகுதிகளில் கிணறும் இருக்காது. பண்ணை வீட்டின் கொல்லைப்புறம் நின்று இரு கை ஏந்தி மீந்த சோற்றை வாங்கிக்கொள்ள வேண்டும். பண்ணையாருக்குத் தொலைவில் நின்று தான் பேச வேண்டும். அவர் அருகில் வந்தால் மண்டியிட்டுக் கை கூப்பி இருக்க வேண்டும். காலை 4 மணியிலிருந்து மாலை சூரியன் மறையும் வரை வேலை செய்ய வேண்டும். விடுமுறை என்பதெல்லாம் அகராதியில்

இல்லாத சொல். பழைய சோறும், சுடு கஞ்சியும் தான் உணவாகக் கிடைக்கும். குடும்பம் முழுமைக்கும் சேர்த்து சொற்ப கூலியே கிடைக்கும்.

திருமணம் செய்து கொள்ளவும் மிராசுதாரின் அனுமதி வேண்டும், இறந்தவர்களைப் புதைப்பதற்கும் அனுமதி வேண்டும். குழந்தை பிறந்தவுடன் தகவல் கட்டாயம் சொல்லியாக வேண்டும். பண்ணையாட்களின் வீட்டைச் சார்ந்த பெண்களின் உடலின் மீதும் மிராசுதாருக்கு அதிகாரம் உண்டு. இவற்றில் எதை மறுத்தாலும் சவுக்கடியும், சாணிப்பாலும் தான். விடிய விடிய மரத்தில் கட்டி வைத்து அடிப்பதற்கு தண்டம் என்று பெயர். ஊசி முனையளவு கூட நிலம் சொந்தமாக இருக்கக் கூடாது. மிராசுதாரின் இடத்தில் சிறு குடிசை போட்டு வாழ வேண்டும்.

கொடுமை பொறுக்க முடியாமல் மலேசியா,

சிங்கப்பூருக்கு வேலை தேடிப் போகலாம் என்று எண்ணுபவர்களை நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து பிடித்து, உதைத்து இழுத்துவர ஆட்கள் உண்டு. ஒரு பண்ணையிலிருந்து இன்னொரு பண்ணைக்கு வேலை செய்ய மாறிப் போகக் கூடாது. அதாவது கூலி உழைப்பை விருப்பம் போல் விற்பதற்குக் கூட உரிமை கிடையாது. பண்ணைகளின் அதிகாரக் கட்டமைப்பில் கூலி தொழிலாளர்கள் அடிமைகளாகவே இருந்தனர். எனவே அடிமை கலாச்சாரமே எதிர்பார்க்கப்பட்டது; போதிக்கப்பட்டது. அடிமைகளின் உயிரும் உடலும் ஆண்டைகளுக்கு சொந்தம். பணிய மறுத்தவர்கள் கொலை செய்யப்பட்டனர். தமிழகத்தின் வேறு பல இடங்களில் இருந்த நிலையை விட கீழத்தஞ்சையில் கடுமையாக இருந்தது. நவீன இந்தியாவில் வெறும் 50 ஆண்டுகளுக்கு முன்வரை கீழத்தஞ்சையில் இது தான் நிலை.

மார்க்சீய சிந்தனையாளர் கிராம்சி, ஆளும் வர்க்கம், உழைப்பாளி வர்க்கங்களை ஒடுக்குமுறையால் மட்டும் கட்டுப்படுத்துவதில்லை. ஒரு ராணுவவீரர் துப்பாக்கி ஏந்தி நின்றால் அது வெளிப்படையான கட்டுப்பாடு. ஆனால் கலாச்சாரம் நமக்குள்ளேயே குடியிருக்கிறது. அதனைக் கட்டுப்படுத்துவது கண்ணுக்குத் தெரியாது. இது தான் அதன் பலம் என்கிறார். ஆளும் வர்க்கம் சித்தாந்த ரீதியாக, மற்ற வர்க்கங்கள் அதற்குக் கீழானவர்கள் என்பதை ஏற்க வைக்கிறது என்று விளக்குகிறார். பண்ணை அடிமைகளாக இருந்த விவசாய தொழிலாளிகள், தாம் அடிமைப்பட்டுக் கிடப்பதையும், தம் வாழ்வின் சகல அம்சங்களை ஆண்டைகள் கட்டுப்படுத்தி வைத்திருப்பதையும் இயற்கையானது; தங்களுக்கு விதிக்கப்பட்டது என்று ஏற்றுக் கொள்ள வைக்கப்பட்டனர். ஒரு புறம் கடும் அடக்குமுறை இருந்தாலும் மறு புறம் மிராசுதார்கள் பொருளாதாரத்திலும், சாதியிலும் மேலானவர்கள்; நாம்

அவர்களுக்குக் கீழ்ப்படிந்தவர்கள் என்ற கருத்தியல் வலுவாக நிலைகொண்டிருந்தது. இவ்வாறான சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் உழைப்பு சுரண்டல் தங்கு தடையின்றி நடந்தது. ஆளும் வர்க்க சிந்தனைகள் பொது புத்தி என்ற பெயரில் ஒட்டுமொத்த சமூகத்தின் சிந்தனைகளாவது சமூகக் கட்டுப்பாட்டின் ஓர் அம்சமே.

பொருளாதார கோஷங்கள் மட்டுமல்ல:

கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவின் படி தோழர் சீனிவாசராவ் கீழத்தஞ்சை வந்தார். கூலி உயர்வு மட்டுமல்ல; உழைப்பாளிகளை மனிதர்களாக நடத்த வேண்டும் என்பதும் செங்கொடி இயக்கத்தின் அழுத்தமான கோரிக்கையாக இருந்தது. ஏண்டி என்றால் ஏண்டா என்று கேள்; அடித்தால் திருப்பி அடி; பண்ணையார்களின் கூலிப்படை வந்தால் அவர்களை நீங்கள் மரத்தில் கட்டி வையுங்கள் என்ற பி.எஸ்.ஆரின் ஆவேசமான வார்த்தைகள்

அடிமைப்பட்டுக் கிடந்தவர்களுக்கு உத்வேகத்தை அளித்தன. துண்டை தோளில் போடு, வேட்டி கட்டு என்ற தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் முழக்கங்களும் கிசான் சபையிலிருந்து வந்தன. ஆண்டை அடிமை என்பது இல்லை; அவர்களும் மனிதர்கள் தான்; நாமும் மனிதர்கள் தான் என்ற சமத்துவ சிந்தனைகள் போதிக்கப்பட்டன. தொடர்ந்து நடந்த போராட்டங்கள், எண்ணற்ற தியாகங்களின் மூலமே பண்ணையடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைத்தது. வெண்மணி தியாகம் இதற்கு சிகரம் வைத்தாற் போல் அமைந்தது.

வேலை பார்க்க வெவ்வேறு இடங்களுக்குப் போகலாம் என்பது கூட போராட்டங்களுக்குப் பிறகே கிடைத்த உரிமையாக இருந்தது. வெண்மணிக்குப் பிறகு அமைக்கப்பட்ட கணபதியா பிள்ளை கமிஷன் குறைந்த பட்ச கூலி, வீட்டு மனை கொடுப்பது

உட்பட சில மாற்றங்களைப் பரிந்துரைத்தது. இந்த மாற்றங்களுக்குப் பின்பே, கிசான் சபா கொடுத்த துணிச்சலும் சேர்ந்து துண்டு தோளுக்குப் போனது; வேட்டியும், புடவையும் கணுக்காலைத் தொட்டன; பள்ளிக்கூடம் போக முடிந்தது; சொந்த வீட்டில் குடியிருக்க முடிந்தது; சுடு சோறு சாப்பிட முடிந்தது; செருப்பு அணிய முடிந்தது. மொத்தத்தில் திணிக்கப்பட்ட பண்பாட்டு ஒடுக்குமுறையைத் தளர்த்த முடிந்தது. அதிகார மேலாதிக்கத்தில் விரிசல் ஏற்படுத்தி பொருளாதார ரீதியான முன்னேற்றம் சற்றே கிடைத்தால், அது வாழ்வியலின் இதர அம்சங்களிலும் மாற்றம் காண்பதற்கான களச்சூழலை ஏற்படுத்தும் என்பது கீழத்தஞ்சையில் நிரூபணமாயிற்று. அதில் செங்கொடி இயக்கத்தின் பங்களிப்பு உன்னதமானது.

1930களில் கீழத்தஞ்சையில் சுரண்டலுக்கும், சமூக ஒடுக்குமுறைக்கும் உள்ளாகிக் கொண்டிருந்த

மக்களைத் திரட்ட களம் இறங்கிய மணலூர் மணியம்மா, பிராமணிய ஆணாதிக்கக் கருத்தியலுக்கு சவால் விடும் வகையில் முடி வெட்டி, ஆணின் உடையை அணிந்து, சைக்கிள் ஓட்டி மக்களை அணி திரட்டினார். பெண் என்றால் இப்படித் தான் இருக்க வேண்டும்; அதுவும் உயர்சாதி பெண் இப்படி இருக்க வேண்டும் என்ற பண்பாட்டு மேலாதிக்கத்தைத் தூக்கி எறிந்தார்.

ரஷ்ய புரட்சியின் அனுபவம்:

அடித்தளம் – மேல் கட்டுமானம் என்ற மார்க்சீய தத்துவத்தின் முக்கிய கோட்பாட்டை கவனித்தோமானால், உற்பத்தி சக்திகளும், உற்பத்தி உறவுகளும் சமூகத்தின் அடித்தளமாகவும், பண்பாடு, சித்தாந்தம், கல்வி, மதம், ஊடகம், குடும்பம், அரசு கட்டமைப்பு, அரசு எந்திரங்கள் போன்றவை மேல் கட்டுமானமாகவும் இருக்கின்றன. மேல் கட்டுமானம் என்பது அடித்தளத்தை நியாயப்படுத்துவதாக,

அன்றைய உற்பத்தி உறவும், சொத்துறவும் இயல்பானது என்பதாக அமையும். அடித்தளத்தைக் கட்டுப்படுத்தும் ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலிப்பதாகவே மேல் கட்டுமானம் இருக்கும். அடித்தளம் மாறும் போது, அந்த மாற்றமானது மேல் கட்டுமானத்தில் அதற்கேற்றாற் போல் மாற்றம் வருவதற்கு வழி வகுக்கும். இப்படி கூறுவதை, அடித்தளத்தின் மாற்றம் மட்டுமே மேல் கட்டுமானத்தின் மாற்றத்தை முடிவு செய்யும்; இரண்டுக்கும் இடையிலான உறவு ஒரு வழிப்பாதை என்ற முறையில் புரிந்து கொள்ளக் கூடாது.

இத்தகைய புரிதல் எந்திரகதியானது. அடித்தளமானது மேல் கட்டுமானத்தின் மீது செலுத்தும் செல்வாக்கு பிரதானமானது. அதே சமயம், மேல் கட்டுமானம், அதில் ஏற்படும் மாற்றம் அடித்தளத்தின் மீதும் செல்வாக்கு செலுத்தும். எனவே தான் பொருளாதார துறையில் மட்டுமல்லாமல்

கருத்தியல்/பண்பாட்டு/சித்தாந்த தளங்களில் கம்யூனிஸ்டுகளின் பணி கூர்மையாக வேண்டும்.

உதாரணமாக, ரஷ்ய புரட்சிக்குப் பின்னர், பெண்களின் நிலையும், அவர்கள் குறித்த பிற்போக்கு பண்பாட்டு விழுமியங்களும் தானியங்கியாக மாறவில்லை. சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் பொருளாதார அடித்தளம் மாற்றப்பட்ட பின்னும், மேல் கட்டுமானமாக இருந்த ஆணாதிக்கக் கருத்தியல் உள்ளிட்ட பண்பாட்டு விழுமியங்கள் அவ்வளவு சுலபமாக மாறி விடவில்லை. தோழர் லெனின் அவர்கள் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டமிட்ட பிரச்சாரம், பெண்களைப் பொதுவெளிக்கு, அரசியலுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சி, பாலின சமத்துவ சட்டங்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான போராட்டம் போன்றவற்றின் மூலமாகவே மாற்றம் வந்தது.

புரட்சிக்குப் பின் சமூக நலத்துறையின் மக்கள் கமிசாராக நியமிக்கப்பட்ட அலெக்சாண்ட்ரா கொலந்தாய் மாற்றங்கள் கொண்டு வருவதில் முக்கியப் பங்கு வகித்தார். பெண்களைப் பொதுவெளிக்குக் கொண்டு வர பிரச்சாரம் செய்ய ஒரு தனி பிரிவே ஏற்படுத்தப் பட்டது. கொலந்தாய், இனேசா அர்மான்ந், குரூப்ஸ்கயா ஆகியோர் இதற்குப் பொறுப்பேற்றனர். முதலாளித்துவத்துக்கு முந்தைய கட்ட சமூகத்தின் மிச்ச சொச்சங்களைத் துடைத்தெறிந்து, சோஷலிச மாண்புகளை எடுத்துச்செல்லும் புரட்சிகர மாற்றத்தின் முகவர்களாகப் பெண்கள் பார்க்கப்பட்டனர். குறிப்பாக, மத்திய ஆசிய பகுதியில் ஆணாதிக்க ஒடுக்குமுறையால் அதிகம் பாதிக்கப்பட்ட முஸ்லீம் பெண்களுக்குக் கல்வி கொடுத்து, சமத்துவ பண்பாட்டை உள்ளார்ந்த உணர்வாக மாற்ற முயற்சித்த போது, மத்திய ஆசிய பகுதியில் பல எதிர்ப்புகள் எழுந்தன. அவற்றையெல்லாம் தாண்டித் தான் பண்பாட்டுத்

துறையில் மாற்றங்கள் வந்தன. மார்க்சீய சிந்தனையாளர் கிராம்சி, ஒரு புதிய சமூகத்தை உருவாக்கிப் பராமரிக்க வேண்டும் என்றால் புதிய உணர்வுநிலையையும் உருவாக்க வேண்டும் என்கிறார்.

இந்தப் புரிதலுடன் தான் மார்க்சிஸ்ட் கட்சியின் திட்டத்தில், மக்கள் ஜனநாயக அரசின் ஒரு முக்கிய கடமையாக "ஜனநாயக, மதச்சார்பற்ற கண்ணோட்டம் கொண்ட ஒரு புதிய முற்போக்கு மக்கள் கலாச்சாரத்தை உருவாக்கும் வகையில் மக்களின் ஆற்றலும், திறனும் வளர்த்தெடுக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வெண்மணி படுகொலைகள் தமிழ் இலக்கிய துறையில் ஓர் அதிர்வலையை ஏற்படுத்தின. வெண்மணி குறித்தும், அதை ஒட்டியும் ஏராளமான கவிதைகள், படைப்புகள் உருவாக்கப்பட்டன. திரைப்படங்கள் வெளி வந்தன. புதிய படைப்பாளிகள் உருவாயினர். மொத்தத்தில் தலித் மக்களின்

அரசியல் சமூக பண்பாட்டு உரிமைகளும், கூலி நிலைமையும் தமிழகத்தின் இதர மாவட்டங்களை விட ஒப்பீட்டளவில் தஞ்சை, நாகை, திருவாரூரில் மேம்பட்டதாக இருப்பது தற்செயலானதல்ல. அது, கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான போராட்டங்களின் விளை பொருளே. பொருளாதார சுரண்டலை எதிர்த்து மட்டுமல்ல; பண்பாட்டு ஒடுக்குமுறையை எதிர்த்தும் நடந்த போராட்டங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

3. கீழ் வெண்மணி 50 ஆண்டுகள்:

தஞ்சைக் களத்தில், உழைக்கும் வர்க்கத்தின் போராட்டம் !

இரா.சிந்தன்

கீழ் வெண்மணியில் நிகழ்த்தப்பட்டபடுகொலைகள், தனித்த சம்பவம் அல்ல. அது கீழத் தஞ்சையில் (இப்போதைய நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில்) கூர்மையடைந்திருந்த வர்க்கப் போராட்டத்தின் வெளிப்பாடே.

பிரிட்டிஷ் காலனியாதிக்க காலமாக இருந்தாலும், இந்திய விடுதலைக்கு பிறகான சூழலிலும், மாநிலத்தில்

ஆட்சி மாறிய பின்னணியிலும், தொடரும் வர்க்கப் போராட்டத்தின் உக்கிரத்தை வெளிக்காட்டும் நிகழ்வுகளில் ஒன்றே கீழ்வெண்மணி தியாகம் ஆகும்.

பிரிட்டிஷ் ஆதிக்க காலம் :

அப்போதைய தஞ்சாவூர் இந்திய அரிசி உற்பத்தியில் சுமார் 30 சதவீதத்தை கொடுத்து வந்தது. வளமான இப்பகுதியில் விவசாயிகளும் தொழிலாளர்களும் பல்வேறு வகைகளில் சுரண்டப்பட்டார்கள். அரசனுக்கும்,கோயிலுக்கும் விளைச்சலில் பங்கு, இலவச உழைப்பு, காவல் வரி, தொழில் வரி (இறை) ஆகியவை நிலவின. வட்டி திரும்ப செலுத்த முடியாதவர்கள், உரிய வரி செலுத்த முடியாதவர்களின் நிலங்கள் பிடுங்கப்பட்டன. மேலும்,பிரம்மதேயம் உள்ளிட்டு கட்டாயமாக நிலம் தானம் பெறப்பட்டது. இவையெல்லாம் நிலவுடமை ஏகபோகங்களை வளர்த்தன.

1799 ஆம் ஆண்டு முதல் பிரிட்டிஷ் ஆளுகையில் வந்தது தஞ்சை. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு லாபவெறியே அடிப்படையாக இருந்தது. அவர்கள் பழைய நில உறவுகளின் ஒடுக்குமுறைகளை பயன்படுத்திக் கொண்டார்கள். மேலும் துல்லியமாக்கினார்கள்.

நிலத்தில் நேரடியாக உழைப்பவர்களுக்கும், காலனி அரசுக்கும் இடையில் ஜமீன்தார்கள், பண்ணையார்கள், மடங்கள் என்ற இடைத்தட்டினை காலனி அரசு பயன்படுத்திக்கொண்டது. காலனி அரசு இந்த இடைத்தட்டு பகுதியிடம் வரி வசூல் செய்துகொள்ளும். நேரடியாக நிலத்தில் உழைப்பவர்களிடம், இடைத்தட்டு பகுதியினர் வரி வசூல் செய்து கொள்வார்கள் என்ற ஏற்பாடு உருவாக்கப்பட்டது. "விவசாயிகளிடம் அவர்கள் எப்படியும் வசூலிக்கலாம், வேலை வாங்கலாம்.

அதற்கு அரசு நிர்வாக அமைப்பு பூரண உதவி செய்யும்.'' என விவரிக்கிறார் கோ.வீரய்யன். (ஆதாரம்: விவசாய இயக்கத்தின் வீர வரலாறு) ' (தனது) மூலதனத்திற்கு சராசரி லாபத்தைக் கூட (விவசாயி) அடைய முடியாத நிலையில் நிலப்பிரபு (நில)வாரத்தை (அதாவது குத்தகைத் தொகையை) நிர்ணயிக்கிறார். அதன் மூலம் கொள்ளையடிக்கிறார்'' என இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் தனது 'மார்க்சியமும் நிலவாரமும் என்ற கட்டுரையில் குறிப்பிடுவதைப் போலவே, தஞ்சையிலும் சுரண்டல் நிலவியது. பிரிட்டிஷ் முதலாளிகள், பழைய நிலைமைகளை மாற்றினார்கள், அதே சமயம் தங்கள் சுரண்டலுக்கு ஏதுவாக, முதலாளித்துவத்திற்கு முந்தைய சுரண்டல் அமைப்பையும் தக்க வைத்துக் கொண்டார்கள்.

அதிகமான வரி வசூல் மட்டுமல்ல; இலவச உழைப்பு, நிபந்தனைகளை நிறைவேற்ற

முடியாதவர்களுக்கு கொடூரமான தண்டனைகளும் தஞ்சை முழுவதும் நிலவி வந்தன. ரயத்துவாரி நிலப்பிரபுக்களுக்கு சொந்தமாக பண்ணைகள் இருந்தன. அங்கேயே குடி வைக்கப்பட்டிருந்த பண்ணைகளில் அடிமைகள் ஒட்டச் சுரண்டப்பட்டார்கள். மிக மோசமான தீண்டாமை வடிவங்கள் நிலவின. சாணியைக் கரைத்து வாயில் ஊற்றுவது (சாணிப்பால்), சவுக்கடி வழங்குவது ஆகிய மனிதத் தன்மையற்ற தண்டனைகளும், பொதுக்கிணறுகள், ஆற்று நீர், சாலை, கோயில் வழிபாடு மற்றும் கல்வி மறுப்பு நிலவியது. இக்கொடுமைகளில் இருந்து தப்பித்து ஓட முயன்றவர்கள் பிடித்து வரப்பட்டு கடுமையாக தண்டிக்கப்பட்டனர்.

லாபவெறியும், எதிர்ப்பு இயக்கமும்:

உலக நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தஞ்சை விவசாயிகளுடைய வாழ்க்கையிலும்,

விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலும் நேரடி தாக்கங்களை ஏற்படுத்தின. இரண்டாம் உலகப் போரின் காலத்தில், தஞ்சையிலும் சுரண்டலும், அடக்குமுறைகளும் கடுமையானது. போர்க்காலத்தில், தானியங்களை அதிக விலையில் விற்று கொள்ளை லாபம் பார்க்கும் வெறியுடன் உற்பத்தியை அள்ளிச் சென்றார்கள் காலனியாதிக்கவாதிகள். மக்களின் உணவுக்குக் கூட கையிருப்பு இல்லாத விதத்தில், தஞ்சைப்பகுதி நிலப்பிரபுக்களும், மடங்களும் விளைபொருட்களை எடுத்துக் கொண்டார்கள். உணவுப் பஞ்சத்தினாலும், கொள்ளை நோய்களாலும் மக்கள் செத்து மடிந்தார்கள்.

5,000 – 6,000 ஏக்கர் நிலச் சொந்தக்காரரர்களான குன்னியூர் சாம்பசிவ அய்யர், வலிவலம் தேசிகர், பூண்டி வாண்டையார், கபிஸ்தலம் மூப்பனார் போன்ற நிலப்பிரபுக்கள் காங்கிரஸ் கட்சியில்

இருந்தனர். வடபாதி மங்கலம், நெடும்பலம் போன்ற பகுதிகளில் இருந்த நிலப்பிரபுக்கள் திராவிட இயக்க ஆதரவாளர்களாக இருந்தனர். (‘தென்பரை முதல் வெண்மணி வரை’ மு.அப்பணசாமி) 1937 டிசம்பர் மாதத்தில் நீடாமங்கலத்தில் நடந்த தென்தஞ்சை மாவட்ட காங்கிரஸ் கட்சி மாநாட்டில் சமபந்தி போஜனம் நடைபெற்றது. இதில் சாப்பிட்ட தாழ்த்தப்பட்ட தொழிலாளர்களை நிலவுடைமையாளர்கள் கட்டி வைத்து அடித்தார்கள். அவர்களே காங்கிரஸ் கட்சியில் கோலோச்சினார்கள்.

அடக்குமுறைகளை மக்கள் அமைதியாக ஏற்கவில்லை. சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் எதிர்ப்பு இயக்கங்கள் உருவாகின. 1936-39ஆண்டுகளில் மணலூர் மணியம்மை என்ற கைம்பெண், வைதீக ஆச்சாரங்களையும், பண்ணையார்களையும், பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தையும் எதிர்த்து மக்களைத்

திரட்டினார். விவசாயிகள் சங்கம் சேர்வதை ஊக்குவித்தார். முதலில் காங்கிரஸ் கட்சியில் செயல்பட்ட அவர், பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து இயங்கினார். (1954 ஆம் ஆண்டில் அவர் கொல்லப்பட்டார்.).

ஒடுக்குமுறைகளுக்கு எதிராக விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் திரட்ட கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்தது. தஞ்சையில் நிலவி வந்த தீவிர ஒடுக்குமுறைகளை அறிந்த கட்சி, பி. சீனிவாச ராவை இப்பகுதிக்கு அனுப்பி வைத்தது. மதராஸ் மாகாணத்தின் தென் கர்நாடகப் பகுதியைச் சேர்ந்தவர் சீனிவாசராவ். தமிழ் பேசுவார்; ஆனால் எழுதவோ படிக்கவோ தெரியாது. தஞ்சைக்கு வந்த அவரது வழிகாட்டுதலில் சாதி ஒடுக்குமுறைகளுக்கும், சுரண்டலுக்கும் எதிராக உழைக்கும் மக்களை அணிதிரட்டினார்கள் கம்யூனிஸ்டுகள்.

‘ஆரம்பத்தில் சாதி இந்துக்களான வார தாரர்களும் குத்தகைதாரர்களும் சிறு விவசாயிகளும் விவசாயிகள் சங்கத்தை சரிவர புரிந்து கொள்ளாமல் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தனர். விவசாயிகள் சங்கத்தை ஆதிதிராவிடர்களின் சாதி சங்கம் என்று நினைத்தார்கள். சாதி வெறுப்பு அதிகமாய் இருந்தபடியால் விவசாயிகள் சங்கத்தின் கொள்கைகளையும், திட்டத்தையும் பற்றி அறிந்துகொள்ள அவர்களுக்கு காலதாமதமாயிற்று’ என விவரிக்கிறார் சீனிவாசராவ். தென்பரை கிராமத்தில் 1943 ஆம் ஆண்டு விவசாயிகள் சங்கத்தின் (கிசான் சபை) முதல் கிளை உருவாக்கப்பட்டது.

சாதி இந்துக்களின் வெறுப்பு மனநிலையை பயன்படுத்தி, உழைக்கும் மக்களிடையே பிரிவினையை உருவாக்க பண்ணையார்கள் முயற்சித்தனர். விவசாயிகள் சங்கம் இந்த சூழ்ச்சியை புரிந்துகொண்டது. சாதி ஆதிக்கத்திற்கு

எதிரான களத்தில் நின்று, உழைக்கும் மக்கள் ஒற்றுமையை முன்னெடுத்தது. தோளில் துண்டு அணியக் கூடாது, வேட்டி அணியக் கூடாது, செருப்பு அணியக் கூடாது, தேநீர் வழங்குவதில் பாகுபாடு (இரட்டைக் குவளை, சந்து வழியாக வழங்குவது), தண்ணீர் வழங்குவதில் பாகுபாடு என அங்கு நிலவிய சாதிக்கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களை கம்யூனிஸ்டுகள் தலைமையேற்று நடத்தினர். அதே சமயம், பண்ணையாட்களையும், விவசாயிகளையும் ஒட்டச் சுரண்டிக் கொண்டிருந்த பண்ணையார்கள், மடாதிபதிகள், மிராசுதார்களுக்கு எதிரான போராட்டங்களும் வலுப்பட்டன.

தென்பரை கிராமத்தில் உத்திராபதி மடத்திற்கு சொந்தமான நிலத்தில் உழைத்து வந்த குத்தகை விவசாயிகள், குத்தகையாக 82 சதவீத விளைச்சலைக் கொடுத்துக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி 33

சதவீதம்தான் தர முடியும் என சங்கம் முடிவு செய்தது .உடனே சங்க செயலாளராக இருந்த வீராசாமியை, 3 ஏக்கர் குத்தகை நிலத்திலிருந்து விரட்டியது உத்திராபதி மடம். சங்கத்தை அனுமதிப்பதை விட பயிர்கள் வயலிலேயே கருகட்டும் என முடிவு செய்தனர் மடத்தினர். விளைந்த நெல்லை அறுவடை செய்ய தடை போட்டார்கள். ஆனால் குத்தகை விவசாயிகள் உத்தரவை மீறினார்கள். போராட்டம் குறிப்பிடத்தக்க வெற்றியடைந்தது.

பெரும்பகுதி தாழ்த்தப்பட்டவர்களாக இருந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை மறுத்த வன்கொடுமைகளுக்கு எதிரான போராட்டங்களை கம்யூனிஸ்டுகள் வழிநடத்தினர். போராட்டத்தை ஒடுக்க அடியாட்களை ஏவினார்கள் பண்ணையார்கள். ஆனால் கம்யூனிஸ்டுகளின் உறுதியான போராட்டம், அரசு நிர்வாகத்தை தலையிடச்

செய்தது. அடுத்தடுத்த வெற்றிகள் கம்யூனிஸ்டுகள் மீது நம்பிக்கையை அதிகரித்தது. இந்தச் சூழலில் இந்தியா விடுதலையடைந்தது.

இந்திய விடுதலையும், அடக்குமுறையும்:

காலனியாதிக்கம் முடிவுக்கு வந்ததென்றாலும், அது நிலஉறவுகளில் உடனடி மாற்றங்களைக் கொண்டு வரவில்லை. மாறாக கம்யூனிச இயக்கத்தை அடக்கும் முயற்சிகள் தொடங்கின. 1948 முதல் 1951 வரை நான்கு ஆண்டுகளுக்கு தஞ்சையில்144 தடை உத்தரவு அமலில் இருந்தது. இந்த உத்தரவு கம்யூனிஸ்ட் இயக்கத்தை பலவீனப்படுத்தவே பயன்படுத்தப்பட்டது.

தலைவர்கள் தலைமறைவாக இயங்கினார்கள். சுதந்திர இந்தியாவில் போராட்டக் களத்தில் கைது செய்யப்பட்ட களப்பால் குப்பு, திருச்சி சிறையில் விஷம் கொடுத்து கொல்லப்பட்டார். பொய் வழக்குகள்

புனையப்பட்டன. நிலப்பிரபுக்களுடன் சமரசம் செய்துகொண்ட இந்திய அரசின் வர்க்கத்தன்மை மிகத் தெளிவாக வெளிப்பட்டது.

இக்காலகட்டத்தில், முதல் சட்டமன்றத் தேர்தல் நடந்தது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 6 தொகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது. மக்களிடம் கம்யூனிஸ்டுகளுக்கு இருந்த செல்வாக்கு வெளிப்பட்டது. அடக்குமுறைகள் பலிக்கவில்லை என உணர்ந்து கொண்ட ஆளும் வர்க்கம் இறங்கி வர நேர்ந்தது. ஜமீன் ஒழிப்பு, இனாம் ஒழிப்பு சட்டங்கள், விவசாயிகளுக்கு மூன்றில் ஒரு பங்கு வாரம், பண்ணையாட்களுக்கு கூலி ஒப்பந்தங்கள் என சில மாற்றங்கள் இந்தப் பின்னணியில்தான் ஏற்பட்டன.

இக்காலத்தில், நிலச் சீர்திருத்தசட்டம் வந்தபோதும் பெரும்பகுதி நிலம் ஏகபோகத்திலேயே தொடர்ந்தது. பெற்ற சட்டங்களை

அமலாக்குவதற்காகவும் போராட வேண்டியிருந்தது.

உதாரணமாக 'தஞ்சாவூர் பண்ணையாள், சாகுபடிதாரர் பாதுகாப்புச் சட்டத்தை' தமிழகம் முழுமைக்கும் அமலாக்க கம்யூனிஸ்ட்டுகள் வலியுறுத்தினார்கள். இதற்காக சிதம்பரத்தில் விவசாயிகள் பெருந்திரளாக போராடினார்கள். சிதம்பரம் வட்டத்திற்கு மட்டும் அச்சட்டம் விரிவாக்கப்பட்டது. இப்படி படிப்படியாகவே மாற்றங்கள் சாத்தியமாகின. இனாம் ஒழிப்புச்சட்டத்தின்படி நிலம் எடுக்கும் பட்டியலில் 198 கிராமங்களை இணைக்க 17 ஆண்டுகள் போராட வேண்டியிருந்தது. இந்திய விடுதலையும், மெல்ல மெல்ல ஏற்பட்ட மாற்றங்களும், நில உறவுகளை மாற்றியமைத்தன. பண்ணை அடிமைச் சுரண்டல் வீழ்த்தப்பட்டு, கூலி உழைப்பு முறை வந்தது.

1959 ஆம் ஆண்டில் விவசாயத் தொழிலாளர்

சங்கம் உருவாக்கப்பட்டது. கூலி உயர்வு, கூலி ஒப்பந்தங்களுக்கான கோரிக்கைகள் எழுந்தன. எனவே தங்கள் ஏகபோகத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன், மிராசுதார்கள் நெல் உற்பத்தியாளர் சங்கத்தை உருவாக்கினார்கள். அவர்கள் கூலிஉயர்வை மறுத்தது மட்டுமல்ல; கூலியை உயர்த்திக் கொடுக்கக்கூடாதென்று சிறு நிலவுடமையாளர்களுக்கும் தடை போட்டார்கள்.

கூலி உயர்வுப் போராட்டங்களை திராவிட இயக்கம் விமர்சித்தது. வர்க்கப் போராட்டம் தீவிரமடைந்த சூழலில், திராவிட இயக்கத்தின் இந்த நிலைப்பாடு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களிடையே கேள்விகளை உருவாக்கின. இப்பகுதியில் குறிப்பிடத்தக்க வகையில் செயல்பட்டுவந்த திராவிட விவசாயிகள் சங்கத்திற்குள் அதிர்வுகள் ஏற்பட்டன.

ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களுடன் ஏ.ஜி.கஸ்தூரிரங்கன் உள்ளிட்ட திராவிட விவசாயிகள் சங்கத்தினர் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இணைந்தார்கள். 1963, கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் தத்துவார்த்த மோதல் வலுவாக நடந்து வந்த காலம். 1964 ஆம் ஆண்டு மார்க்சிஸ்ட் கட்சி உருவானது. கீழத்தஞ்சையில் வர்க்க இயக்கத்தை மார்க்சிஸ்ட் கட்சி வழிநடத்தியது.

மாநிலத்தில் ஆட்சி மாற்றம்:

சில ஆண்டுகளில், (1967) தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மார்க்சிஸ்ட் கட்சியுடன் தொகுதி உடன்பாடு கொண்டு தேர்தலை சந்தித்தது திமுக. தேர்தல் முடிவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை இழந்து, திமுக ஆட்சியமைத்தது. அரசு இயந்திரம் எப்போதும் போல் தன் வர்க்கத்திற்கு சேவையாற்றியது.

1957 ஆம் ஆண்டிலேயே கேரளத்தில் அமைந்த

கம்யூனிஸ்ட் அமைச்சரவை, தொழிலாளர் பிரச்சனைகளில் காவல்துறை தலையிடாது என கொள்கையை மேற்கொண்டது. பிராந்திய முதலாளித்துவ கட்சியான திமுக, நிலவுடைமையாளர்களோடு சமரசம் செய்துகொண்டது. திமுக ஆட்சியில் ‘கிசான் போலீஸ்’ என்று அழைக்கப்பட்ட காவலர்கள் உள்ளூர் அளவில் மிராசுதார்களின் அடக்குமுறைகளுக்கு சாதகமாக செயல்பட்டனர். கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஒடுக்குவதற்கான ஏற்பாடாகவே அது இருந்தது. கூலி உயர்வுக்காக முத்தரப்பு பேச்சுவார்த்தையை விவசாயத் தொழிலாளர்கள் வலியுறுத்தியபோது, திமுக அரசாங்கம் அதை ஏற்கவில்லை.

1966 அக்டோபர் 6 ஆம் தேதி பூந்தாழங்குடி கிராமத்தில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிச்சூட்டில் பக்கிரி என்ற விவசாயத் தொழிலாளர்

கொல்லப்பட்டார். மிகப்பெரும் எழுச்சி வெடிக்கும் என்ற நிலையில்தான் முத்தரப்பு பேச்சுவார்த்தை சாத்தியமானது.

வெண்மணி என்ற கொதிகலன்:

நாகப்பட்டினம் வட்டத்தில் நெல் உற்பத்தியாளர் சங்கத்தின் ஒரு கிளை இருஞ்சூர் கோபால கிருஷ்ண நாயுடு என்ற காங்கிரஸ்காரரின் கட்டுப்பாட்டில் இருந்தது. கம்யூனிச இயக்கத்தின் முன்னே தங்கள் சுரண்டல் சாம்ராஜ்யம் நொறுங்குவதை மிராசுதாரர்களால் ஏற்க முடியவில்லை. எத்தகைய அடக்குமுறைக்கும் தயாரானார்கள்.

சிக்கல் பக்கிரி கொல்லப்பட்டார். நிலக்கிழாராக இருந்தும் விவசாய தொழிலாளர்கள் பக்கம் நின்ற கீழக்கரை ஏ.ஜி.ராமச்சந்திரன் போலீசார் முன், வயலில் வெட்டிக் கொல்லப்பட்டார். இக்கொலைகளை

கண்டித்து பொதுக்கூட்டம் நடந்த நாளிலேயே சின்னப்பிள்ளை கடத்தி கொல்லப்பட்டார். மேலும், நெல் உற்பத்தியாளர் சங்கம் நடத்திய பொதுக்கூட்டத்தில் ‘வெண்மணி சேரியை தீ வைத்து கொளுத்துவோம்’ என்று எச்சரித்து பேசினார்கள். எதிர் வரவுள்ள சூழல் கடுமையாக இருக்கும் என்பதை கம்யூனிஸ்டுகள் உணர்ந்தார்கள்; எச்சரித்தார்கள். ஆனால், அரசு இயந்திரம் திட்டமிட்ட மெத்தனத்துடன் இயங்கியது. காங்கிரஸ் தலைவர் காமராஜர், விவசாயத் தொழிலாளர்கள் மீதே குற்றஞ் சாட்டிக் கொண்டிருந்தார்.

19.09.1968 அன்று மத்திய, மாநில அரசு ஊழியர்கள் குறைந்தபட்ச சம்பளம் கேட்டு நடத்தியபோராட்டத்திற்கு ஆதரவாக தஞ்சையில் விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அதில் கீழ்வெண்மணி தொழிலாளர்களும்

பங்கெடுத்துக் கொண்டார்கள். இதிலிருந்து அப்பகுதியில் நிலவிய அரசியல் உணர்வையும், உறுதிப்பாட்டையும் உணர்ந்து கொள்ள முடியும். பண்ணையார்கள் இந்த அரசியல் உறுதிப்பாட்டை ஒடுக்க நினைத்தார்கள். இப்போராட்டத்தில் பங்கெடுத்ததற்காகவும் சேர்த்து ரூ.250 அபராதம் விதித்தார்கள்.

டிசம்பர் 25 ஆம் தேதி இரவில் காவல் துறையும், கோபாலகிருஷ்ண நாயுடு தலைமையில் சென்ற ரௌடிகளும் கீழ் வெண்மணி கிராமத்தை சூழ்ந்து கொண்டு தாக்கினர். தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக ராமய்யாவின் குடிசைக்குள் 48 பேர் மறைந்து கொண்டார்கள். குடிசையின் கதவைப் பூட்டினார்கள் ஏவலாட்கள். குடிசைக்கு நெருப்பு வைக்கப்பட்டது. தீயின் வெப்பம் தாளாமல் தப்பி ஓடியவர்கள் 6 பேர். அவர்களில் இருவரைப் பிடித்து

மீண்டும் நெருப்புக்குள் வீசினார்கள் அடியாட்கள். ஒரு தாய் தன்னுடைய ஒரு வயது குழந்தையை நெருப்பில் இருந்த காப்பாற்றுவதற்காக வெளியே வீசினாள். பச்சிளம் குழந்தையென்றும் பாராமல் அதை மீண்டும் நெருப்பில் தூக்கியெறிந்தார்கள். வெளியிலிருந்து இச்சம்பவங்களை பார்த்து அலறிய குழந்தைகளையும் தாக்கினார்கள்.

சம்பவம் நடைப்பெற்ற அன்று இரவு எட்டு மணிக்கு கீவளூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. நள்ளிரவு 12-மணிக்கே காவல் துறையினர் வந்தனர். கனன்று கொண்டிருந்த குடிசையின் உள்ளே மனித உயிர்கள் சாம்பல்களாகி விட்டிருந்தன. இரவு இரண்டு மணிக்கு தீயணைப்புப் படை வந்தது. காவல் அதிகாரிகள் அடுத்த நாளில்தான் வந்தார்கள்.

1969 ஜனவரி 12 ஆம் தேதி, பீப்பிள்ஸ் டெமாக்ரசி

இதழில் பி.டி.ரணதிவே பின்வருமாறு எழுதினார்: “சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிடும் என்ற காங்கிரஸ் பிரச்சாரத்திற்கு அஞ்சியும், தன் கட்சிக்குள் இருக்கும் நிலவுடைமையாளர்கள் அழுத்தத்திற்கு பணிந்தும், தாமதத்திற்கு (திமுக) அமைச்சரவை வழிவகுத்தது, அது பின்னவர்கள் தொழிலாளர்கள் மீது தாக்குதல் நிலையெடுக்க ஊக்கமளித்தது”.

யார் யார், எந்தப் பக்கம் என தெளிவானது:

வெண்மணியின் தியாகமும் அதன் தொடர்ச்சியான நிகழ்வுகளும், வர்க்கப் போராட்டக் களத்தில் யார், எந்தப் பக்கம் நிற்கிறார்கள் என்பதை உணர்த்துகின்றன.

கோபாலகிருஷ்ண நாயுடு உட்பட இப்படுகொலையை முன்நின்று நடத்தியவர்களில் பலர் காங்கிரஸ்காரர்கள். காவல்துறையை கையாண்ட திமுக அரசாங்கம், மிராசுதார்களுக்கு சாதகமாக நடந்து

கொண்டது. மேலும், பெரியார் தலைமையில் செயல்பட்ட திராவிடர் கழகமும், கூலி உயர்வுப் போராட்டங்களையே வன்முறைக்கு காரணமாக கற்பிக்க முயன்றது.

மேலும், வெண்மணி படுகொலைகள் குறித்து செய்தி வெளியிட்ட பத்திரிக்கைகள் "விவசாயிகள் இருபிரிவினர் இடையே நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து" படுகொலைகள் நடந்ததாகக் கூறின. "விவசாய பணிகளுக்கு அமர்த்தப்பட்ட வெளியாட்களை 200 பேர் சூழ்ந்து கொண்டு தாக்கி, கொலை செய்ய முயன்றதால் மோதல் மூண்டதாகவும், அந்த மோதலில் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கலாம்" என்றும் தெரிவித்தன.

இதுகுறித்து எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி 'கீழவெண்மணி கொலை பாதகம் பற்றிய செய்திகளை தீக்கதிரில் தேடித் தேடிப்

படித்தேன். எல்லா இதழ்களும் மௌனம் சாதிக்கிற தருணத்தில் இந்த தீக்கதிர் இதழ் மட்டும் இந்தச் செய்தி பற்றிய பேருண்மைகளை சத்தம் போட்டுச் சொன்னது' என்கிறார்

இவ்வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு இன்னமும் அப்பட்டமாய் மிராசுதார்களை ஆதரித்தது "இந்த வழக்கில் சிக்க வைக்கப்பட்டுள்ள அனைத்து 23 குற்றவாளிகளும் மிராசுதாரர்களாக இருப்பதும் திகைக்க வைக்கும் விஷயமாக உள்ளது. இவர்களில் பெரும்பாலோர் பெருமளவு நிலத்தைச் சொந்தமாகக் கொண்டுள்ள பணக்காரர்கள். முதலாவது குற்றவாளி கார் ஒன்றை சொந்தமாகக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவு. இத்தகைய மிராசுதாரர்களா இடது கம்யூனிஸ்ட் விவசாயிகளைப் பழிவாங்கும் அளவுக்கு பலவீனமான எண்ணம் கொண்டிருப்பார்கள்(?)" என வியாக்கியானம் கொடுத்தது நீதிமன்றம்.

போராட்டக் கனல் அணையவில்லை:

நிலவுடைமைச் சுரண்டலுக்கு எதிராகவும், அதன் சாதி ஆதிக்கத்திற்கு எதிராகவும் உழைக்கும் மக்களைத் திரட்டி, தெளிவான தாக்குதலைத் தொடுத்து வந்த கம்யூனிஸ்ட் இயக்கம், தொடர்ந்து முன்னேறியது. படுகொலைகளும், அடக்குமுறைகளும் ஏவப்பட்டன. உண்மைகளை இருட்டடிக்க முயற்சி நடந்தது. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பல உயிர்த் தியாகங்களைச் செய்து போராடினார்கள், நிலவுடைமை ஏகபோகத்தை தாக்கினார்கள். உடைப்பை ஏற்படுத்தினார்கள். அரசியல், சமூகத் தளங்களில் வெற்றிகள் கிடைத்தன.

கீழ்வெண்மணி படுகொலைகளை விசாரிக்க அமைக்கப்பட்ட கணபதியா பிள்ளை ஆணையம், கீழத்தஞ்சையில் நிலவிய கடுமையான உழைப்புச் சுரண்டலை வெளிக்கொண்டு வந்தது. அதன்

அடிப்படையில் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இச்சட்டம் முதலில் தஞ்சையிலும், அதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் அமலாகின.

1970களில் நில விநியோகத்திற்கான இயக்கங்கள் வேகம் பிடித்தன. நிலச்சீர்திருத்தத்திற்கான முந்தைய சட்டம் திருத்தப்பட்டது. 1970 முதல் 1991 வரையிலான காலகட்டத்தில் திருவாரூர், நாகை மாவட்டங்களில் சாகுபடிக்கு தகுதியான சுமார் 6 லட்சம் ஏக்கர் நஞ்சை நிலத்தில் சுமார் 3 லட்சம் ஏக்கர் நிலம், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கச் செய்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் பழைய நில உறவுகள் இயல்பாக மாறிவிடவில்லை. சாதீய ஒடுக்குமுறைகளை வீழ்த்தவும், நிலவுடைமை ஏகபோகத்தை தகர்க்கவும் ஒன்றுபட்ட போராட்டங்களும், அளப்பரிய தியாகமும் தேவைப்பட்டன. வர்க்கப் போராட்டமே மேம்பட்ட

சமுதாயத்தை உருவாக்கும் என்ற பாடத்தை கீழத்தஞ்சை கம்யூனிஸ்ட் இயக்கம் நமக்கு கற்பிக்கிறது.

4. கீழ்வெண்மணி 50 ஆண்டுகள்: கலை இலக்கிய தாக்கம்

வெ. ஜீவகுமார்

கீழத்தஞ்சையில் உக்கிரமாக நடந்துவந்த வர்க்கப் போராட்டத்தின் விளைவாக ஏகபோக நிலவுடமையாளர்கள் சீற்றமடைந்தார்கள். சாதி ஆதிக்கத்தையும், பொருளாதாரச் சுரண்டலையும் எதிர்த்து மக்கள் திரள்வதை, ஆளும் வர்க்கம் விரும்பவில்லை. கீழ்வெண்மணியின் படுகொலைகளுக்கு பிறகும் அவர்களால் வர்க்க இயக்கத்தை வீழ்த்த முடியவில்லை என்பது ஒருபக்கம் இருக்க. இப்படி தங்கள் அடக்குமுறைத் தாண்டவம் செய்திகளிலோ, சினிமா ஊடகத்திலோ பிற பகுதி மக்களுக்கு கடத்தப்படுவதை தடுக்கும் முயற்சிகளும்

இருந்தன.

வாய்மொழி வரலாறு:

பொய்ச் செய்திகள், இருட்டடிப்புக்கான பரப்புரைகளைத் தாண்டி, வாய்மொழி வரலாறாக, நாட்டுப்புற பாடல்களாக, ஒப்பாரிப்பாடலாக உண்மைச் செய்திகள் மக்களை அடைந்தன. "தென்பறை முதல் வெண்மணி வரை" என்னும் நூலில் வாய்மொழி வரலாற்றை தொகுத்தார்.

ஆட்சியாளர்கள், மேட்டுக்குடிகள், அரசர்கள் வெட்டிய கல்வெட்டுகள், பட்டயங்கள், ஆட்சியாளர்களின் வரலாறுகளைக் கூறும் இலக்கியப்பாக்கள் ஆகியவையே வரலாறாகத் தொகுக்கப்படுகின்றன. இதில் மக்கள் அந்த ஆட்சியை எப்படி பார்த்தார்கள், அவர்கள் பாடு என்ன என்பது பதிவுசெய்யப்படுவதில்லை. அந்த

மக்கள் பேசும்போதே அது மக்கள் வரலாற்றுக்கான தரவுகளாகிறது. எனவேதான் இம்முயற்சியில் ஈடுபட்டேன் என்கிறார் அப்பணசாமி.

நாவல் பதிவுகள்:

கோழிகள், ஆடுகள் வெந்து எரியும் மாமிச நெடிதான் இது என்பது காவல்துறையின் நினைப்பு. அவர்கள் ஒன்றும் மதராஸ் போலீஸ் அல்ல, அடக்குமுறையை தம் பரிபூரண உடல் மொழியாக கொண்ட மலபார் போலீஸ் "அம்புட்டும் மனுசங்கய்யா" என்று நான்தான் கத்தினேன் என்கிறார் ராமையாவின் குடிசையில் சின்னச்சுவர் வழியே வெளியே குதித்த பழனிவேல்.

அந்த மனிதர்களிடம் தம் உடலை மறைக்க போதிய ஆடைகள் இல்லை; பொங்கி சாப்பிட ஆங்கமாய் ஒரு அடுப்பு இல்லை. வெயிலோ

மழையோ கூரை வழியே ஒழுகும் பொத்தல் குடிசைகள் அவர்களின் வீடுகள். நிலச்சுவான்தார்கள் துப்பாக்கி வைத்திருந்தபோது ஆயுதம் என்று வைத்துக்கொள்ள கூலிகளிடம் ஒரு பிளேடு கூட கிடையாது.

ஆயினும் பூட்ஸ் கால்களோடு ஆயுத அணிவகுப்பு நடத்திய காவல் துறையின் குண்டாந்தடிகளை அவர்கள் சந்தித்தனர். முன்பே கூறியபடி இவர்கள் சாதாரண ரக போலீஸ் அல்ல. சன்னரக நாத்து என்பது போல் தமிழ் தெரியாத மலபார் போலீஸ் மற்றும் கிசான் போலீஸ் ஆகிய சிறப்புப் பிரிவினர் ஆவர். பின், காவல்துறையின் வன்முறையை விவசாய தொழிலாளர்கள் எந்த ஆயுதத்தால் எதிர் கொண்டார்கள்? கொள்கை உறுதியால், அமைப்பு வலிமையால்.

செங்கொடியின் பங்கு :

சோலைசுந்தரபெருமாள் தன் செந்நெல் நவீனத்தில்

கண்ணுச்சாமி என்ற பாத்திரம் மூலம் இதனை உணர்த்துகிறார். வெண்மணியில் டீக்கடைக்காரர் வடிவேலு, கண்ணுச்சாமி ஆகிய செங்கொடி இயக்கத் தோழர்கள் பாத்திர படைப்பாக வருகின்றனர். மாமூல் வாங்கும் போலீஸ் இன்ஸ்பெக்டரால் இவர்கள் அச்சுறுத்துவதற்காக பிடிக்கப்படுகின்றனர். எனினும் காவல் நிலையத்திற்கு அவர்களை அழைத்துச் செல்லாமல் ஒரு பண்ணையாரிடம் விடப்படுகின்றனர். எனினும் மக்கள் கூட்டம் பெரும் திரளாகச் சென்று அவர்களை மீட்கிறது. தங்களுக்கு ஏற்பட்ட ஆபத்தை கூறும் கண்ணுச்சாமி, அவரை கண்டு கதறும் அவருடைய அப்பா பெரியானிடம் பின்வருமாறு கூறுகிறார்.

"... யப்பா... நம்ம செங்கொடிக்கும் அவனுங்க மஞ்சக்கொடிக்கும் நடக்கிற போராட்டம்ப்பா இது. நம்ம கொடிக்காக எது நடந்தாலும் அதை மனசார நாம

ஏத்துக்கிட்டுத்தான் ஆகணும். அதுக்காவ என்னை ஒப்படைச்சுக்கிட்டேன். உனக்கு(அண்ணன்) ஒரே புள்ளதான்னு நினைச்சுக்கப்பா.”

கொடிகாத்த குமரனை வரலாற்றில் படிக்கிறோம். அதேபோல் செங்கொடி காக்க உயிரோடு நடமாடிய கண்ணுச்சாமிகள் மீது சரித்திரத்தின் டார்ச் ஒளி பட வேண்டும். பிள்ளைக்கு சட்டை துணி இல்லாவிட்டாலும் தம் கட்சியின் கொடித்துணிக்காக இவர்கள் போராடினார்கள்.

டிசம்பர் 25, 1968ல் வெண்மணியில் உயிரோடு 44 பேர் கொளுத்தப்பட்ட நிகழ்வு எல்லா தளங்களிலும் தாக்கத்தையும் பெரும் பாதிப்பையும் உருவாக்கியது.

காவியமான வெண்மணி:

சாட்டையடிகளால் ஒருவரை அழ வைக்கலாம்; அடி வாங்கியவர் விரும்பாவிட்டால் அவரை ஆட

வைக்க முடியாது. அவருக்கு ரத்தம் வரவைக்கலாம்; பாட வைக்கவோ பணிய வைக்கவோ; முடியாது அவரின் எதிர்வினை கலகமாக, கிளர்ச்சியாக வெளிப்படும். நிலபிரபுத்துத்திற்கும் சாதியத்துக்கும் எதிரான வெண்மணி நிகழ்வு கோஷங்களை, பாடல்களை, நாடகங்களை, சிறுகதைகளை, நாட்டியங்களை, சங்கீதத்தை, ஓவியங்களை, நவீனத்தை கவிதைகளை யாத்து தந்தது.

“வெண்மணியில் மாண்டவர்கள் மீண்டு வருகிறோம்;

வெங்கொடுமை தீயை நெஞ்சில் ஏந்தி வருகிறோம்;

காத்திருந்த புலிகள் என காட்ட வருகிறோம்- அந்த கயவருக்கும் மரண ஓலை தீட்ட வருகிறோம்”

என்ற கவிதா கோஷத்தை வார்த்தது.

1968க்குப்பின் வெண்மணி என்ற பெயர் பிள்ளைகளுக்கு சூட்டப்பட்டது; வளர்ந்த பெரியவர்கள் கூட தங்களின் புனைப்பெயராக வெண்மணியை பொறித்தனர். வெண்மணி நினைவாக மண்டபங்கள், வெளியீடுகள் ஏராளம் வந்தன.

மனித இதயங்களில் நிலநடுக்கத்தை உருவாக்கிய வெண்மணி நிகழ்வு படைப்புகளை, படைப்பாளிகளை தந்தது மட்டுமல்ல இடது சாரி அமைப்புகளிடம் காந்தப்புயலாக மனித நேயர்களை ஈர்த்தது. புதினங்களில் முதல் வரவு இந்திரா பாத்த சாரதியின் குருதிப்புனல்தான். வெண்மணி பற்றிய அவர் புரிதல் பின்வருமாறு இருந்தது.

“தலித் மக்களை உயிருடன் கொளுத்திய பண்ணையார், 56 வயதாகியும் விவாகம் ஆகாதவர். சுற்றுப்புறத்தில் இருந்த கிராமங்களில், பல பெண்களுடன் தொடர்பு இருந்ததாகக்

காட்டிக்கொண்டார் என்று சிலர் என்னிடம் சொன்னார்கள். கொளுத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் பெண்கள், குழந்தைகள். இயற்கை வஞ்சித்துவிட்ட காரணத்தால், தன் கோபத்தைப் பெண்களிடத்தும் குழந்தைகளிடத்தும் காட்டியிருக்கலாமோ என எனக்குத் தோன்றியது.'' இந்த புரிதல் தவறானது என்பதை வெண்மணி நிகழ்வை ஒட்டிய தியாகிகள் பட்டியல் பார்த்தால் புரிந்துகொள்ளலாம்.

சோலை சுந்தரபெருமாளின் செந்நெல் வெளிவரும் வரை குருதிப்புனல்தான் வெண்மணி குறித்த ஒரே நாவலாக இருந்தது. உழைப்பாளி வர்க்க மொழியின் குருதியில் செந்நெல் பேசியது. வெண்மணி குறித்த இதர நவீனங்கள் பாட்டாளியின் கீழைத்தீ, மீனா கந்தசாமியின் குறத்தியம்மாள் ஆகியவை ஆகும். ''கீழைத்தீ'' சி.பி.ஐ.(எம்.எல்)

கட்சியின் அரசியலை பேசியது. குறத்தியம்மாள் அரசியல் தளமும் வேறுபட்டது. தற்குறிப்பேற்று அணியாக இவர்களின் நூல் அவர்களின் தனிப்பட்ட வாஞ்சைகளின் வெளிப்பாடாக இருந்தது.

திரைப்பட வார்ப்பில்:

வெண்மணி குறித்த முக்கிய திரைப்படமாக அறியப்படுவது 1983ல் வெளிவந்த கண்சிவந்தால் மண் சிவக்கும் திரைப்படமாகும். ஸ்ரீதர்ராஜன் இயக்கத்தில் இப்படம் வந்தது. மனிதா மனிதா இனி உன் விழிகள் சிவந்தால்.... என்று தொடங்கும் ஒரு பாடல் நெஞ்சில் ஆவேச பேரலைகளை உசுப்பியது.

இடது சாரி வெகுசன அமைப்புகள் இப்படத்தை சிறப்பு காட்சிகளாக திரையிட்டன. சிவப்புமல்லி, சிவந்த கண்கள், அலை ஓசை ஆகிய படங்களும் வெண்மணியை வெள்ளிதிரையில் நினைவுப்படுத்தின.

‘ராமய்யாவின் குடிசை’ என்ற ஆவணப்படத்தை பாரதி கிருஷ்ணகுமார் இயக்கினார். இதில் தொழிலாளி வர்க்க போராட்டத்தின் ஆவணப்பதிவுகள் தொகுக்கப்பட்டன. 1968-69களில் தமிழ் சினிமா உச்ச நட்சத்திரங்களாக இருந்த எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகியோர் படங்களில் வெண்மணியில் சாயல் படியாமல் திரைக்கதை அமைக்கப்பட்டது.

கவிதை முழக்கங்கள்:

கவிஞர்கள் தணிகைச்செல்வன், இன்குலாப், இளவேனில், வெண்மணி உள்ளிட்டோர் வெண்மணியின் ஜ்வாலையை தங்கள் பேனாவின் உதிரமாக்கினர்.

“சதையும் எலும்பும் நீங்க வெச்ச தீயில் வேகுதே. ஒங்க சர்க்கரும் கோர்ட்டும் அதில் எண்ணெயை ஊத்துதே” என்ற இன்குலாப் வரிகள் நீதி தேவதையின்

மயக்கத்தை சுட்டின.

வெண்மணித் தீ ஏராளமான நாட்டுப்புற பாடல்களிலும் கனன்றது.

“அரை லிட்டர் நெல் கூலி அதிகம் கேட்டதாலோ

ஆணும் பெண்ணும் சேர்ந்து செங்கொடி பிடித்ததாலோ

கோபம் கொண்ட இதயமில்லா பண்ணை மிருகங்கள்

அவர் குடிசையிலே தீயை மூட்டி உயிருடன் எரித்தார்”

என்று ஒரு பாடல் மொழிந்தது.

“வெண்மணி தோழர்கள்தாம் தம் வீடு

தீயில் வெந்ததை மறந்திடுமோ நாடு”

என்பது மற்றொரு பாடலின் ஆதங்கம்.

“நந்தனார் காலம் முதலே

இந்த நாகரிக காலம் வரையிலே

வெந்து சாவது நாங்களே -இதை

வேடிக்கை பார்ப்பது நீங்களே...”

என்று ஒரு பாடல் குற்றம் சுமத்தியது.

“ஐம்பூதங்களில் நிலமங்கை மட்டுமே

சுரண்டும் வர்க்கத்துக்குச் சோரம் போயிருந்தாள்.

அந்த இரவிலோ –

அக்கினித் தேவன் கூடத் தஞ்சைப் பிரபுக்களின்

கைக்கூலியானான்”

என இயற்கையும் கூட சுரண்டல் வர்க்கத்தின் அடிமையா என மற்றொரு பாடல் கேள்வியெழுப்பியது.

வெண்மணி படுகொலைகள், மார்க்சியத் தெளிவோடு இயங்கிய வர்க்க இயக்கத்தை நோக்கிய தாக்குதலாகும். அந்த நெருப்பினால் வர்க்க இயக்கத்தை அச்சுருத்த முடியவில்லை என்பது மட்டுமல்ல, இருட்டடிக்கச் செய்த முயற்சிகளை மீறி, அந்த வீர வரலாறு இப்போதும் நமக்கு வழிகாட்டி நிற்கின்றது.

(இக்கட்டுரையில் பட்டியலிடப்பட்டுள்ள படைப்புகள் ஒரு பகுதியே ஆகும். இன்னமும் ஏராளமான புத்தகங்கள், கதைகள் படைப்புகள் தொகுக்கப்படவேண்டியுள்ளது)

5. தொழிலாளி, விவசாயி ஒற்றுமையே புரட்சியின் அச்சாணி

ச. லெனின்

"பிரபுத்துவ மீத மிச்சங்களுக்கும், முதலாளித்துவத்துக்கும் எதிரான எங்கள் போராட்டத்தில், நாங்கள் ருஷ்யாவின் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்வதில் வெற்றி பெற்றோம். மூலதனத்தையும், பிரபுத்துவத்தையும் எதிர்த்து விவசாயிகளும், தொழிலாளர்களும் ஒன்றுபட்டதுதான் எங்களுடைய வெற்றி அவ்வளவு சுபலமாக காரணமாய் இருந்தது" என்று குறிப்பிடுகிறார் லெனின்.

ரஷ்ய புரட்சியின் இந்த அனுபவம் உலக

கம்யூனிஸ்ட் இயக்கங்களுக்கான முக்கியமான படிப்பினையாக அமைகிறது. பிரெஞ்சு புரட்சியின் போது ” விவசாய வர்க்கம், முதலாளி வர்க்கத்தின் உதவிப்படையாக செயலாற்றியது. இதன் விளைவாக, அங்கு முதலாளி வர்க்கத்தின் அரசியல் சக்தியை அதிகமாக பெருக்குவதில் கொண்டு போய் விட்டது.” என்று கூறுகிறார் ஸ்டாலின். மற்ற மேற்கத்திய நாடுகளைப்போல் அல்லாமல் ரஷ்ய முதலாளிய புரட்சியின் போது அங்கு வர்க்க போராட்டம் வளர்ந்திருந்தோடு, தொழிலாளி வர்க்கம் சுயேச்சையான அரசியல் சக்தியாகவும் வளர்ந்திருந்தது. 1902 ஆம் ஆண்டு நடந்த விவசாயிகளின் போராட்டம் மற்றும் அதை தொடர்ந்த பல்வேறு எழுச்சிகளில் கிடைத்த படிப்பினைகளின் மூலம் தேர்ச்சியடைந்த விவசாயி வர்க்கம் “தொழிலாளி வர்க்கத்துடன் தோளோடு தோள் நின்று, அதன் தலைமையின் கீழ் போரிட்டது. நிலம் மற்றும் சமாதானம் ஆகியவற்றை

தொழிலாளி வர்க்கப் புரட்சியின் மூலம் பெற்றது'' என்கிறார்.

பாரிஸ் கம்யூன் தொழிலாளி வர்க்கத்தின் வெற்றியாக அமைந்தாலும் நேச சக்திகளான, சமூகத்தின் பெரும் பகுதியாக விளங்கிய விவசாய வர்க்கத்தை இணைக்காதது, அதை மிக விரைவில் வீழ்த்த முதலாளித்துவத்திற்கு எளிதாக அமைந்தது. "அதிகாரத்தை கைப்பற்ற முதலில் நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு போக வேண்டும். கட்சி கிராமங்களிலும் வலுவடைய வேண்டும்'' என்கிறார் ஏங்கல்ஸ். அதன்படி ரஷ்ய கம்யூனிஸ்டுகள் மிக அதிகமாகவே கிராமங்களில் தங்களுக்கான ஆதரவை திரட்டுவதில் வெற்றி பெற்றனர் என்கிறார் ஸ்டாலின்.

புரட்சியில் விவசாயிகளின் பாத்திரத்தை நிராகரித்த மென்ஷ்விக்குகளின் கருத்தை எதிர்த்ததோடு, முதலாளித்துவ ஜனநாயக புரட்சியை,

தொழிலாளி வர்க்க புரட்சியை நோக்கி உடனடியாக முன்னேறுவதற்கு பயன்படுத்துவது என்பதை லெனின் வலியுறுத்தினார். அதுவே ரஷ்யாவில் வெற்றிகரமான தொழிலாளி வர்க்க புரட்சியை சாத்தியப்படுத்தியது.

பிரெஞ்சு புரட்சியின் அனுபவங்களும், பாரீஸ் கம்யூனின் படிப்பினைகளும் விவசாயி-தொழிலாளி ஒற்றுமையே வெற்றிகரமான புரட்சிக்கான அடிப்படை என்பதை கற்றுத் தந்துள்ளது. சீன புரட்சியின் வெற்றியும் விவசாயி-தொழிலாளியின் ஒற்றுமையின் அவசியத்தை சுட்டுகிறது. எனவேதான் "தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் வலுவான கூட்டணிதான் மக்கள் ஜனநாயக முன்னணிக்கு மையமானதும், அடித்தளமானதுமாகும்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம் வலியுறுத்துகிறது.

ரஷ்ய, சீன புரட்சிகளின்அனுபவங்களை கருத்தில் கொண்டு, இந்திய சமூகத்தின் பிரத்யேக சூழல்களை கவனத்தில் இருத்தி "முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூகத்தின் மிச்ச சொச்சங்களை சாதி மற்றும் கிராமங்களின் மிக நீண்டகால பின்தங்கிய தன்மை காரணமாக கட்டிக் காக்கப்படும் நடைமுறைகள் ஆகியவற்றையும்

துடைத்தெறிய தேவையான சமூக முறை சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்கிறது கட்சி திட்டம்.

இந்திய பிரத்யேக தன்மை

இந்திய சமூகத்தில் சாதியும், வர்க்கமும் பின்னிப் பிணைந்துள்ளது. "இந்தியாவின் முதலாளித்துவத்தை, தனித்த இந்திய இயல்புகளுடன் கூடிய முதலாளித்துவமாகப் பார்க்கவேண்டும். இந்திய

விடுதலைக்குப் பின், இங்கே வளர்ச்சியடைந்த முதலாளிகள், நிலப்பிரபுத்துவத்துடனும், அரை நிலப்பிரபுத்துவ உறவுகளோடும் சமரசம் செய்துகொண்டனர். இந்தியாவில் விவசாயப் புரட்சி முழுமையடைந்து, உற்பத்தி உறவுகளில் ஜனநாயக மாறுதல்கள்நடக்கவில்லை. வளர்ந்து வரும் முதலாளித்துவ அமைப்பின் ஒரு பகுதியாக சாதீய அதிகாரப் படிநிலைகளும், சாதீய சமூக வடிவங்களும் தொடர்ந்து நீடிக்கின்றன.'' என்பதை நமது கட்சி ஆவணங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

தொழிலாளி, விவசாயி,விவசாய தொழிலாளி உள்ளிட்ட உழைக்கும் மக்களை ஒருங்கிணைத்து திரட்டுவதன் மூலமே மக்கள் ஜனநாயக புரட்சியை சாத்தியப்படுத்த முடியும். ஆனால் வர்க்கங்களாக மட்டுமில்லாமல் சாதி அடையாளங்களையும் கொண்டே, நாம் வர்க்கமாக திரட்ட வேண்டிய

பகுதி மக்கள் உள்ளனர். நமது பணி இந்த புரிதலின் அடிப்படையில் அமைந்திடவேண்டியுள்ளது.

உங்களை எதிர்நோக்கும் பணி உலகின் கம்யூனிஸ்ட்டுகளை இதற்கு முன் எதிர் நோக்கியிராத ஒன்றாகும். கம்யூனிசத்தின் பொதுத் தத்துவத்தையும், நடைமுறையையும் ஆதாரமாய்க் கொண்டு நீங்கள் ஐரோப்பிய நாடுகளில் இல்லாதவையான பிரத்யேகமான நிலைமைகளுக்கு உங்களைத் தகவமைத்துக் கொண்டாக வேண்டும்" என்று 1919 ஆம் ஆண்டு கீழ்த்திசை மக்களது கம்யூனிஸ்ட் நிறுவனங்களின் இரண்டாவது அகிலத்தில் லெனின் குறிப்பிட்டார்.

இந்திய உற்பத்தி முறையில் ஆதிக்கம் செலுத்தும் வகையில் முதலாளித்துவம் வளர்ந்திருந்தாலும், "இந்திய முதலாளித்துவ அமைப்பில் வர்க்கங்களின் வளர்ச்சியானது, சாதீய அடுக்கமைவும்,

பிரிவுகளும் கொண்ட சமூக நிலைமைகளுக்கு உட்பட்டேநிகழ்கிறது. இந்திய முதலாளிகளில் பெரும் பகுதியினர், சில குறிப்பிட்ட சாதிகளில் இருந்துதான் வந்திருக்கின்றனர்.

விடுதலைக்கு பிறகான இந்திய முதலாளிகளில் டாட்டா (பார்சி) தவிர மற்ற முதலாளிகள் எல்லாம் பனியா சாதியினர்தான். அதேசமயம் கொத்தடிமைகளாகவும், ஒட்டச் சுரண்டப்படும் தொழிலாளர்களாக ஆதிவாசி மக்களும், தலித் மக்களுமேஉள்ளனர்". ஏழை விவசாயிகளாகவும்,கூலித் தொழிலாளர்களாகவும்பிற்படுத்தப்பட்ட மக்களே உள்ளனர்.

பிரிவினைகளை கடந்த ஒருங்கிணைவு

பொது எதிரியான முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராட வேண்டிய தொழிலாளி

மற்றும் விவசாயிகள் சாதி என்கிற பிரிவினையால் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். தொழிலாளி, விவசாயிகளிடேயே வர்க்க உணர்வை வளர்த்தெடுப்பதற்கு சாதி தடையாக அமைகிறது. ஒருங்கிணைந்த எதிர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள,சாதி, முதலாளி வர்க்கத்திற்கு சாதகமாக உள்ளது. அதே சமயம் ஒடுக்கப்படும் மக்களுக்காக பேசுவதாக கூறும் அடையாள அரசியல் பேசும் பின் நவீனத்துவ வாதிகள் ஒருங்கிணைந்த போராட்டத்தை நீர்த்துப் போக வைக்கும் வகையிலேயே தங்களின் யுக்திகளை முன்வைக்கின்றனர். இது இயல்பாகவே முதலாளிகளுக்கு சாதகமாக அமைந்திடுகிறது.

“ஜனநாயகம், ஜனநாயகப் புரட்சி என்றாலே சாதிப் பிளவுகளையும், ஒடுக்குமுறைகளையும் ஒழித்துக் கட்டுவதுதான். அவ்வாறில்லாமல் ஜனநாயகம் பிறக்காது. சோசலிசத்தை எட்டுவதற்கே இதுவொரு

முன் நிபந்தனையாகும். நாம் முன்னெடுப்பது தலித் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல. சாதி அமைப்பையே ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டமாகும். சாதிப் படிநிலை அமைப்பில், ஒவ்வொரு சாதியும் இன்னொன்றை ஒடுக்குகிறது. அனைத்து அநீதியான சாதிய கட்டமைப்பிற்கும், நியாயங்களுக்கும் முடிவு கட்ட வேண்டும். இந்தப் போராட்டம், வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியே'' என்கிறது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி.

ஒடுக்கப்படும் மக்களின் தனித்துவமான பிரச்சனைகளை அங்கீகரித்து போராடுவதோடு, பிரதான எதிரியை வீழ்த்துவதற்காக உழைக்கும் மக்களின் ஐக்கியத்தையும் உருவாக்குவது அவசியமானதாகும். ஆகவேதான் கட்சி தீண்டாமைக்கு எதிராகவும், அதேசமயம் சுரண்டப்படும் அனைத்து மக்களின்

விடுதலைக்காகவும் போராடுகிறது. ஒருங்கிணைந்து போராட வேண்டிய வர்க்கங்களைபிரித்தாளும் வேலையை முதலாளித்துவ-நிலப்பிரவுத்துவ அமைப்பு செய்கிறது. அதை எதிர்கொண்டு, பிரிவினையை தடுத்து, உழைக்கும் மக்களிடையே ஒற்றுமையை உருவாக்கிட வேண்டிய கடமை கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு.

அகச்சூழலும், புறச்சூழலும்

"கிராமப்புற ஏழைகள் மற்றும் நகர்ப்புற தொழிலாளர்களிடையே ஏற்படக்கூடிய ஒற்றுமை அதிக எண்ணிக்கையிலான மக்கள் திரளை ஒன்றுபடுத்தும். அவர்கள் (ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவானவர்கள்) லட்சக்கணக்கில் என்றால் நாம் கோடிக்கணக்கில் அணி திரள்வோம்" என்றார் லெனின். இந்த ஒற்றுமையை, ஐக்கியத்தை அகச்சூழலும், புறச்சூழலுமே தீர்மானிக்கிறது. கட்சிக்குள்ளும், தொழிலாளி, விவசாயி இயக்கங்களுக்குள்ளும்

தொடர்ச்சியான பிரச்சாரமும், களத்தில் அவர்களின் பங்களிப்பை அதிகப்படுத்துவதும் அவர்களைஇந்த ஒன்றுபடுதலுக்கு தயார்ப்படுத்தும். தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளை கடுமையாக தாக்கும் ஆட்சியாளர்களின் கொள்கை அவர்களை ஒருங்கிணைந்த போராட்டத்திற்கு உந்தித் தள்ளும்.

கடந்த செப்டம்பர் 5ம் தேதி டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர், விவசாயி மற்றும் விவசாய தொழிலாளர்களின் ஒருங்கிணைந்த போராட்டம் இதன் சிறு வெளிப்பாடே ஆகும். அயோத்தியில் கோவில் வேண்டாம், விவசாய கடனை ரத்து செய்யுங்கள் என்ற முழக்கத்தோடு நவம்பர் 29, 30-ல் டெல்லியை முற்றுகையிட்டவிவசாயிகளின் பேரணி சாதி, மத பேதங்களை கடந்த ஒருங்கிணைந்த போர்க் குரலே. வரும் ஜனவரி 8, 9 ஆம் தேதிகளில்தொழிற்சங்கங்கள்அறிவித்துள்ள பொது

வேலை நிறுத்தத்திற்கு விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர் சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்த ஒருங்கிணைவு காலத்தின் தேவை என்பதோடு புறச்சூழல் அதனை உறுதிப் படுத்துகிறது.

“கடந்த காலங்களில் இல்லாத நிலைமைகள் இந்த வர்க்கங்களுக்கிடையே இத்தகைய ஒற்றுமையினை உருவாக்கி இருக்கின்றன. இந்தியாவில் இன்றைய நவீன தாராளவாதஆட்சி தொழிலாளர்களையும் விவசாயிகளையும் வரலாறு காணாத வகையில் இந்த அளவிற்கு இணைந்திருக்கிறது” என்கிறார் பேரா. பிரபாத் பட்நாயக்.

“நகர்ப்புற தொழிலாளர்களுடன் ஒருங்கிணைந்து போராடத் தவறினால், வாட்டி வதைக்கும் பல்வேறு கொத்தடிமை முறைகளிலிருந்தோ, இல்லாமை மற்றும் வறுமை நிலையிலிருந்தோ கிராமப்புற ஏழைகள் தங்களை விடுவித்துக் கொள்ள முடியாது”

என்கிறார் லெனின். அதே போல் " பரவலான விவசாயப்பெருங்குடி மக்களின் உதவியோடுதான் பாட்டாளி வர்க்கப் புரட்சி கூட்டு இசையாக மாறும். அது இல்லையென்றால் எல்லா விவசாய நாடுகளிலும் பாட்டாளி வர்க்கம் தனிப்பட்டு அதன் கடைசி பாட்டாக மாறிவிடும் அபாயம் உண்டு" என்று எச்சரிக்கிறார் மார்க்ஸ். மேற்கண்ட வரிகள் இந்திய சமூகத்தில் நிலவும் பொருளாதாரஏற்றத்தாழ்வை உடைத்து நொறுக்க தொழிலாளி – விவசாயிகளின் ஒற்றுமையின் அவசியத்தை எடுத்துரைக்கிறது.

வரலாற்றின் பகுதிகளில் முதலாளித்துவ சக்திகளுக்கு உதவிப் படையாக வைக்கப்பட்டிருந்த விவசாய வர்க்கத்தை, ரஷ்ய, சீன அனுபவங்களிலிருந்து தொழிலாளி வர்க்கத்தின் நேச சக்தியாக இணைத்திட வேண்டியுள்ளது. ஆளும் வர்க்கத்திற்கு எதிரான விவசாயிகளின் போராட்டத்தை ஆதரிப்பதோடு

அதற்குத்தேவையான உதவிகளை மேற்கொள்வதில் தொழிலாளி வர்க்கம் முனைப்புடன் செயலாற்றிட வேண்டும். “விவசாயி வர்க்கத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்களின் அடிமை விலங்குகளை அறுக்கவும், சுரண்டலை ஒழிக்கவும், வறுமை படுகுழியிலிருந்து கரை ஏறவும், ஒடுக்குமுறையிலிருந்து விடுபடவும் விவசாயி வர்க்கம் நடத்தும்போராட்டங்களுக்கு தொழிலாளி வர்க்கம் தவறாது ஆதரவு கொடுக்க வேண்டும்” என்று வலியுறுத்துகிறார் ஸ்டாலின்.

“விவசாயிகளின் கோரிக்கைகளுக்காக தொழிலாளி வர்க்கம் உணர்வுபூர்வமாக செயல்படாமல், அக்கோரிக்கைகளுக்காக போராடாமல், புரட்சிக்கு தேசிய உள்ளடக்கம் அளிக்க முடியாது. புரட்சியும் முன்னேறி செல்ல முடியாது.” தொழிலாளி வர்க்க ஒற்றுமையையும், தொழிலாளி வர்க்க கூட்டாளிகளாக விளங்கக்கூடிய விவசாயி வர்க்கத்தை

தன்னோடு நெருக்கமாக இணைத்துக் கொள்வதும் பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும். இது புரட்சியை சாத்தியப்படுத்துவதற்கான முன் நிபந்தனையாகவும் அமைகிறது. தொழிலாளி வர்க்கம், உழைக்கின்ற பெரும்பகுதி விவசாயிகளின் ஒற்றுமையை சார்ந்திருப்பதன் மூலமும், தன்னை சுற்றி உழைக்கும் விவசாய பகுதியினரை அணிதிரட்டுவதன் மூலமாகவும் மட்டுமே, தொழிலாளி வர்க்கம் தன்னை விடுவித்துக்கொள்வதோடு, மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்து உழைக்கும் விவசாயிகளையும், மனித இனத்தையும் விடுவிக்கின்ற தன் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முடியும் என்று லெனின்

மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.'' பாட்டாளி ''வர்க்கத்துடன் நகமும் சதையுமாக கட்சி இணைந்து'' இப்பணிகளை வழிநடத்தி முன்னோக்கி அழைத்துச் சென்றிட வேண்டும்.

“வாழ்க்கை கடினமானதாக இருக்கிறது. எனவே கலகம் செய்யுங்கள் என்று சொன்னால் மட்டும் போதாது. ஒவ்வொரு மேடைப் பேச்சாளனும் இதனைச் செய்ய முடியும். ஆனால் அதனால் எந்த பயனும் இல்லை” என்று தனது “கிராமப்புற ஏழை மக்களுக்கு”

என்கிற நூலில் லெனின் குறிப்பிடுகிறார். மேடைப் பேச்சாளர் போல் பேசிவிட்டு, செயலில் இறங்காமல் இருப்பவர்கள் கம்யூனிஸ்டுகள் அல்ல. மார்க்சியம் என்பதே செயலக்கான வழிகாட்டிதான். அந்த வகையில் உள்ளூர் சமூகத்தில் கம்யூனிஸ்டுகளின் பங்கினை இப்புத்தகத்தில் பேசும் லெனின், தொழிலாளர்கள் விவசாயிகளிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டு,ஆட்சியாளர்களின் மக்கள் விரோத

செயல்பாடுகளை வர்க்க கண்ணோட்டத்தோடு விளக்கி புரிய வைத்திடவேண்டுமென்கிறார்.

பொருளாதார கோரிக்கைகளுக்கான போராட்டங்களோடு நின்று விடாமல், அதற்கு அடிப்படை காரணமாக விளங்கும் அரசியல், தத்துவார்த்த அம்சங்களை புரிய வைப்பதும்தான் கம்யூனிஸ்டுகளின் கடமை என்கிறார். எப்படி நவீன தாராளமயக் கொள்கை தொழிலாளியை ஒட்டச் சுரண்டுகிறதோ, அதேபோல் கிராமப்புற விவசாயியையும், அவர்களின் எளிய வாழ்க்கையையுமே அது சீரழித்து விடுகிறது. வாழ வழியின்றி நகர்ப்புறங்களில்அத்துக்கூலிகளாக வேலை செய்ய அவர்கள் தள்ளப்படுகின்றனர். ‘‘ஒரு சுயேச்சையான விவசாயி என்ற நிலையிலிருந்து விவசாயக் கூலியாக மாறி விடுகின்றனர். அல்லது ஒரு தொழிலாளியாக மாறிவிடுகின்றனர்.

அதனால்தான் இப்படிப்பட்ட விவசாயிகள் எல்லாம் அரைப் பாட்டாளிகள் என்று அழைக்கப் படுகின்றனர். அவர்களும் நகர்ப்புற தொழிலாளர்களின் சகோதரர்களே'' என்கிறார் லெனின். பாட்டாளிகளும், அரை பாட்டாளிகளும் நகரங்களில் வேலை செய்யும் முறைசாரா தொழிலாளர்களில் பெரும்பாலோர் கிராம பொருளாதார சீரழிவினால் விவசாயத்தை விடுத்து இடம் பெயர்ந்து வந்தவர்களே. படித்து முடித்து வேலை தேடி நகரங்களுக்கு வருபவர்களை விட வாழ வழியற்று பிழைப்புக்காக இடம் பெயர்பவர்களே அதிகமாக உள்ளனர்.

இந்தியாவில் சுமார் 90 சதம் உழைக்கும் மக்கள் முறைசாரா தொழிலிலேதான் ஈடுபடுகின்றனர். எனவேதான் இவர்களை திரட்ட தனி கவனம் செலுத்த வேண்டும் என்று கட்சி வலியுறுத்துகிறது. முதலாளிகளுக்கு குறைந்த ஊதியத்தில்

தொழிலாளர்களின்கூட்டம் கிடைப்பதற்கு இது உதவுகிறது. முதலாளித்துவம் எப்போதும் வேலையில்லா தொழிலாளர் பட்டாளம் *(Lobour Reserve Army)* இருப்பதை விரும்பும், அதை அப்படியே பராமரிக்கும். ஏனெனில் அப்போதுதான் அதற்கு குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்களை பெற முடியும். தொழிலாளர்களின் பேரம் பேசும் உரிமையை மறுக்க ஏதுவாக இருக்கும். தொழிலாளர்களின் உரிமையை பறிக்க உதவும்.

"கிராமப்புற பாட்டாளிகளும், அரைப் பாட்டாளிகளும்தான் இப்படிப்பட்ட (முறைசாரா) வேலைகளை பார்க்கின்றனர். வேலை எங்கு கிடைக்கிறது என்று ஊர் ஊராகச் சென்று தேடித் திரியும் இவர்கள் பெயரளவில் விவசாயிகள். உண்மையில் கூலி உழைப்பாளர்களே ஆவர். இவர்கள் அனைவரும் நகர்ப்புறத் தொழிலாளர்களுடன் இணைந்து

ஒரே சங்கத்தின் கீழ் அணி வகுக்க வேண்டும். கிராமப்புறங்களைச் சென்றடையும் ஒவ்வொரு வெளிச்ச ரேகையும் அறிவு வளர்ச்சியும் இந்த ஒற்றுமையைபலப்படுத்தி ஐக்கியத்தை ஏற்படுத்தும்” என்கிறார் லெனின்

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தாமல் நகரங்களை நோக்கி வெளியேறும் குறைந்த கூலி தொழிலாளர்களை கட்டுப்படுத்த முடியாது. அது கட்டுப்படுத்தப்படாத வரை வேலையற்ற தொழிலாளர் படைக்கு பஞ்சமிருக்காது. இது தொழிலாளர்களின் உரிமைகளை பறிப்பதில் முதலாளிகளுக்கு கூடுதலான உதவிபுரியும். “பாட்டாளிகள் கூட்டத்துடன் விவசாயிகள் தள்ளப்படுவதிலிருந்து எந்த அளவிற்கு அதிக எண்ணிக்கையில் நாம் விவசாயிகளை காப்பாற்றுகிறோமோ இத்தகைய விவசாயிகளை அவர்கள் விவசாயிகளாக இருக்கும் போதே எளிதாக

நம்பக்கம் வென்றெடுக்க முடியும் அளவிற்கு, எளிதாகவும் சமூக மாற்றம் வெற்றி பெறும்" என்கிறார் ஏங்கல்ஸ்.

விவசாயிகளின் வாழ்நிலை மேம்பாட்டிற்கான போராட்டம் விவசாயிகளை காப்பாற்றுவதோடு, தொழிலாளர்களின் உரிமையை பறிப்பதற்கு உதவும் வேலையற்ற தொழிலாளர் படையை குறைக்கும். தொழிலாளர்களின் பொருளாதார கோரிக்கையை கடந்த இணைந்த அரசியல் போராட்டம் என்பது விவசாயிகள் உள்ளடங்கிய ஒட்டு மொத்த சமூகத்தின் விடுதலைக்கான போராட்டமாக அமையும். அத்தகைய விடுதலைக்கான போராட்டத்தின் அச்சாணியாகவே தொழிலாளர் விவசாயி ஒற்றுமை அமைகிறது.

முதலாளித்துவ ஒழிப்பே உண்மையான சமூக விடுதலை

மூலதனத்தின் வீழ்ச்சிதான் விவசாயிகளை உயர்த்தமுடியும் ஒரு முதலாளித்துவ எதிர்ப்பு, பாட்டாளி அரசாங்கத்தால்தான் விவசாயியின் பொருளாதார வறுமையை, அவனது சமூக சீர்கேட்டை முறிக்க முடியும்". "ஒரு வர்க்கத்திடமிருந்து எடுக்காமல் மற்றொரு வர்க்கத்திற்குக் கொடுக்க முடியாது" என்கிறார் மார்க்ஸ். முதலாளித்துவத்தை ஒழித்து, அதனிடமிருந்து எடுத்து ஒட்டுமொத்த சமூகத்திற்கும் கொடுக்கும் ஆற்றலை கொண்டிருப்பது பாட்டாளி வர்க்கமே. எனவே "விவசாயிகள் முதலாளித்துவ ஆட்சி அமைப்பை ஒழிப்பதை கடமையாகக் கொண்டுள்ள நகர்ப்புறப் பாட்டாளி வர்க்கத்தை தங்களுடைய இயற்கையான தோழனாக, தலைவனாக காண்கின்றனர்" என்று தனது "லூயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர்" புத்தகத்தில் மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

ஒட்டுமொத்த சமூக விடுதலைக்கான போராட்டம் இல்லாமல், தொழிலாளர்களுக்கான விடுதலையோ, விவசாயிகளுக்கான வாழ்வோ, ஒடுக்கப்பட்டு, நசுங்கிக் கிடக்கும் மக்களின் வாழ்வில் வெளிச்சமோ, தனித்தனியே சாத்தியமில்லை. அரசுகள் இவர்களின் கோரிக்கைகளின்பால் கனிவோடு செவி சாய்க்கப் போவதில்லை.

ஏனெனில் "அரசாங்கமே வசதி படைத்தவர்களின் கைகளில்தான் இருக்கிறது. பிறரது உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கும் நபர்களுக்கு எதிராக உழைப்பாளர்கள் தங்களிடையே ஒற்றுமையை வளர்த்துக் கொள்வதுடன் ஏழைகள் அனைவரையும் ஒரே உழைக்கும் வர்க்கமாக – பாட்டாளி வர்க்கமாக ஒன்றுபடுத்திட வேண்டும்"என்று வலியுறுத்தும் லெனின், ஒன்றுபட்டு முதலாளி வர்க்கத்திற்கு எதிராக நடத்தும் போராட்டம் எளிதாக இருக்காது

என்ற போதும், இறுதி வெற்றி சமூகத்தின் பெரும்பான்மையாக இருக்கும் தொழிலாளி வர்க்கத்திற்கே கிட்டும் என்று கூறியதோடு, அத்தகைய வெற்றியை ரஷ்யாவில் சாத்தியப்படுத்தியும் காட்டினார்.

"தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளி விவசாயி ஒற்றுமை என்கிற கோட்பாடு மற்றும் ஜனநாயக புரட்சியை சோஷலிச புரட்சியாக வளர்ப்பது என்ற கோட்பாடுகளை சிறப்பாக செழுமைப்படுத்தி, செயல்படுத்தியதானது மகத்தான ரஷ்யபுரட்சியின் வெற்றியாகும்" அத்தகைய அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டு, தொழிலாளி, விவசாயி, விவசாய தொழிலாளி மற்றும் இன்ன பிற ஏழை மக்களை ஒருங்கிணைத்து மக்கள் ஜனநாயகப் புரட்சியை வென்றெடுப்போம்.

உதவிய நூல்கள் மற்றும் தரவுகள்:

• லூயீ போனபார்ட்டின் பதினெட்டாம்புரூமேர் – கார்ல் மார்க்ஸ்

• கீழ்த்திசை மக்களது கம்யூனிஸ்ட் நிறுவனங்களின் இரண்டாம்

• அகில ருஷ்ய காங்கிரசில் லெனின் ஆற்றிய உரை (1919, நவம்பர் 22)

• கிராமப்புற ஏழைகளுக்கு – லெனின்

• லெனினிசத்தின் அடிப்படை அம்சங்கள் – ஸ்டாலின்

• மார்க்சிய லெனினிய அடிப்படைகள் - தொகுப்பு(முன்னேற்ற பதிப்பகம்)

• மார்க்சிஸமும் விவசாயிகள் பிரச்சனையும் (பிரசுரம்) – ஹர்கிஷன் சிங் சுர்ஜித்

* *இந்தியாவில் சாதி முறை: ஒரு மார்க்சிய பார்வை (கட்டுரை) – பிரகாஷ் காரத்*

6. ஓய்வறியா போராளி

தோழர் கோ.வீரைய்யன்...

ஐ.வி. நாகராஜன்

ஏழை எளிய மக்கள் மீதான பெருநில உடமையாளர்களின் கடும் தாக்குதலை எதிர்கொண்டு, ஒடுக்கப்படும் மக்களை பாதுகாப்பதற்கான போராட்டத்தை கம்யூனிஸ்ட் இயக்கம் முன்னெடுத்தது. அவ்வியக்கத்தை ஒடுக்க முயன்ற ஆதிக்க சக்திகள் வெண்மணி படுகொலைகளை அரங்கேற்றினர். வெண்மணி தியாகத்தின் 50வது நினைவு ஆண்டு இது. வெண்மணி அடக்குமுறைக்குப் பிறகும் விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் போராட்டத்தை வீறுகொண்டு வழிநடத்தியவர் தோழர் கோ.வீரய்யன். கட்சியாலும் மக்களாலும் ஜி.வீ என்று அன்போடு

அழைக்கப்பட்டஅவர், சாதாரண விவசாய குடும்பதில் பிறந்தார். வாழ்க்கை அனுபவங்களின் வழியாக சிறு வயதிலேயே செங்கொடி இயக்கத்தில் இணைந்து 17-வயதிலேயே போராட்ட களத்தில் அடியெடுத்து வைத்தார்.

சித்தாடி என்ற ஊரில் பிறந்த அவர், கிராம கட்சி கிளையில் உறுப்பினராக துவங்கி அவருடைய இயக்க பயணத்தின் தொடர்ச்சியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளராக, மாநில செயற்குழு உறுப்பினராக உயர்ந்தார். அதற்கு பிரதான காரணம் அவரது கொள்கை பற்றும் அர்ப்பணிப்பு உணர்வும்தான். சுய கல்வி மூலம் மார்க்சிய ஞானத்தை பெற்றதோடு மட்டுமின்றி அதை மக்களுக்கான களப்போராட்டங்களில் பொருத்தும் நுண்ணறிவு மிக்க தலைவராகவும் அவர் விளங்கினார்.

1963 முதல் 1968 வரை கீழத் தஞ்சை மாவட்டத்தில்

விவசாயிகள், விவசாய தொழிலாளர் இயக்கங்கள் பல சிக்கலான பிரச்சனைகளை சந்தித்தன. அந்த காலகட்டத்தில் துடிப்பு மிக்க இளந்தோழர்களை இணைத்துக்கொண்டு அனல் பறந்த பல்வேறு பிரச்சனைகளை துணிவுடன் எதிர்கொண்டு முன்னேறுவதற்கு சிறப்பாக பணியாற்றினார். 1968-ம் ஆண்டு டிசம்பர் 25-ல் வெண்மணி படுகொலை நிகழ்ந்தது. இதைக்கண்டித்து அப்போது நடந்த தீவிரமான பல்வேறு போராட்டங்களில் முக்கிய பொறுப்பேற்று வழிநடத்தியவர் தோழர்.கோ.வீரய்யன் ஆவார்.

வெண்மணி கொடூர படுகொலையினால் ஏற்பட்ட நிலைமைகளை மிக தைரியமாக சமாளித்த அப்போது தலைமையில் இருந்த தோழர்களில் இவரது பணி மிகவும் உறுதியாக இருந்தது. தமிழ்நாடு விவசாய, விவசாய தொழிலாளர் சங்க அமைப்புகளில் பல்வேறு

உயர் பொறுப்புகளிலிருந்து பணியாற்றியவர். எம்.ஜி.ஆர். அமைத்த தமிழக விவசாயிகள் உயர்மட்ட குழுவில் உறுப்பினராக பல ஆண்டுகாலம் சிறப்பாக பணியாற்றினார்.

1964-ம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பிளவு ஏற்பட்டபோது தோழர். கே.ஆர். ஞானசம்மந்தம், பி.எஸ். தனுஷ்கோடி, பாரதிமோகன் ஆகியோருடன் இணைந்து தோழர் கோ.வீரய்யன் தஞ்சை மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை கட்டி வளர்ப்பதில் முக்கிய பங்காற்றினார். பல்வேறு சவால்கள் நிறைந்த அந்த காலகட்டத்தில் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் முழுவதும் சௌறு மிகக்கடுமையாக உழைத்தார். 1975-ம் ஆண்டில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டபோது தோழர்.கோ.வீரய்யன் அவர்கள் தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்டு கட்சிப்பணியாற்ற வேண்டும்

என கட்சி முடிவு செய்தது.

இம்முடிவினை ஏற்று கீழத்தஞ்சை மாவட்டம் மட்டுமல்லாமல் மாநிலம் முழுவதும் சென்று கட்சிப் பணியாற்றினார். அதை தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினராக நாகை தொகுதியிலிருந்து இரண்டுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றினார். சட்டமன்றத்தில் உழைப்பாளி மக்களின் பிரச்சனைகளை முன்னிறுத்தி இடைவிடாது போராடினார். தஞ்சை தியாகி என்.வெங்கடாசலம் படுகொலை செய்யப்பட்டபோது அதை எதிர்த்து கண்டன இயக்கத்தில் முன்னணியிலிருந்து செயல்பட்டார்.

தோழர்.என்.வெங்கடாசலத்தின் மூன்று மகன்களையும் திருவாரூர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் தங்கவைத்து உயர் படிப்புவரை

படிக்கவைத்து அவர்களின் முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தார். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மார்க்சிஸ்ட் கட்சியின் வளர்ச்சியில் முனைப்பான இளந்தோழர்களை தலைவர்களாக உருவாக்கியதில் இவரின் பங்கு முதன்மையானது; முக்கியத்துவம் வாய்ந்தது. தோழர் கோ.வீரய்யன் அவர்களின் செயல்பாடுகள் ஒரு தனிமனிதனின் வாழ்க்கை அல்ல. ஒரு மாபெரும் இயக்கத்தின் வரலாறு. கொடிய வறுமையை சந்தித்துக்கொண்டே உழைப்பாளி மக்களுக்கான வர்க்கப் போராட்டத்தில் உறுதியாக இருந்து தீவிர பங்காற்றினார். இவர் எழுதிய வெண்மணித் தீ, சங்கம் படைத்த சரித்திரம், விவசாயிகள் இயக்க வீரவரலாறு, இவருடைய சுயசரிதையான செங்கொடியின் பாதையில் நீண்ட பயணம் ஆகிய புத்தகங்கள் பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவர்களின் ஆய்வுகளுக்கு இப்போதும்

பயன்பட்டு வருகிறது.

இவ்வளவு சிறப்புக்குரிய தலைவரான கோ.வீரய்யன் கடந்த 2005-ம் ஆண்டு வயது முதிர்வின் காரணமாக தன்னுடைய பொறுப்புகளிலிருந்து விலகிக் கொண்டார். அதைத் தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக உடல்நிலை பாதிக்கப்பட்டு கட்சி பணிகளில் ஈடுபடமுடியாமல் தன்னுடைய சொந்த கிராமமான சித்தாடியில் ஓய்விலிருந்து வந்தார்.

அவருடைய வாழ்வின் தீரமிக்க செயல்பாடுகளும் அவர் சந்தித்த நிகழ்வுகளும். இளைய தலைமுறையை ஈர்க்கும் என்பது நிச்சயம். தமிழகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் மற்றும் இதர உழைக்கும் மக்கள் வாழ்வில் ஒரு நம்பிக்கையையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை. 50 ஆண்டுகளுக்கு முன்பு அடிப்படை மனித

உரிமைகளைப் பெற, சமூக ஒடுக்குமுறைகளை தகர்த்தெறிய, வேலைக்காக, கூலிக்காக சாகுபடி உரிமைக்காக, குடிமனை, குடிமனை பட்டாவுக்காக கிராமப்புற மக்களை அணிதிரட்டி போராட்டங்களை நடத்தி வெற்றி பெறுவது என்பது அவ்வளவு எளிதல்ல. ஆனால் அதை அப்போதே செய்துகாட்டி காலத்திற்கேற்ற மாற்றத்தை உருவாக்கியவர்தான் தோழர். கோ. வீரய்யன்.

கணியம் அறக்கட்டளை

தொலை நோக்கு – *Vision*

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

பணி இலக்கு – *Mission*

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில்

அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

எமது பணிகள்

கணியம் மின்னிதழ் *kaniyam.com*

கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.

கட்டற்ற தமிழ் நூல்கள் *FreeTamilEbooks.com*

இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் *epub, mobi, A4 PDF, 6 inch PDF* வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்

• தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்

• விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்

OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை *kaniyamfoundation@gmail.com* க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும்

அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், *GNU GPL, Apache, BSD, MIT, Mozilla* ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற

வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உங்கள் விவரங்களை *kaniyamfoundation@gmail.com* க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation

Account Number : 606 1010 100 502 79

Union Bank Of India

West Tambaram, Chennai

IFSC – UBIN0560618

Account Type : Current Account